PUBLIC LIBRARY
JAFFNA
18 NOV 2009

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN
08-11-2009
மலர்: 133 இதழ்: 21 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

## "மனிதனுக்கு இருக்கும் வாழ்வதற்கான தவிர்க்க இயலாத உரிமையை மதித்தல் வேண்டும்"

### –திருத்தந்தை 16ம் பெனடிக்ற் –



திருப்பீடத்துக்கான அமெரிக்க ஐக்கிய நாட்டுப் புதிய தூதுவர் மிகுவேல் ஹீம்பெர்த்தோ டயாஸிடமிருந்து நம்பிக்கைச் சான்றிதழைப் பெற்று உரையாற்றிய திருத்தந்தை, மனித வாழ்வு, சுதந்திரம், நிலையான மகிழ்ச்சி ஆகிய விழுமியங்கள் தனிப்பட்டவரின் அல்லது தேசிய அளவில் மட்டும் நோக்கப்படாமல் இவை அனைத்து மனித சமுதாயத்திற்கும் உரியதாகப் பார்க்கப்பட வேண்டும் என்று கூறினார். அதிபர் ஒபாமா தலைமையில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பாதுகாப்பு அவையில் நடைபெற்ற அணு ஆயுதக் களைவு குறித்தும் தனது பாராட்டைத் தெரிவித்த அவர், அதில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் உலகை அணு ஆயுதங்கள் இல்லாத இடமாக அமைக்கும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் கூறினார். மனித மாண்பைப் பாதுகாத்தல், கருவறை முதல் இயற்கையான மரணம் அடையும் வரை மனிதனுக்கு இருக்கும் வாழ்வதற்கான தவிர்க்க இயலாத உரிமையை மதித்தல் போன்ற விவகாரங்களில் தெளிவான தேர்ந்து தெளிதல் தேவை என்றும் திருத்தந்தை கூறினார்.

## யாழ். மறைமாவட்ட குருக்களின் வருடாந்த தியானம்

யாழ் மறைமாவட்ட குருக்கள் தமது வருடாந்த தியானத்தை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் மேற்கொள்கின்றார்கள். வழக்கம்போல, இத்தியானம் இரண்டு பிரிவுகளாக நடைபெறுகிறது. 8ம் திகதி முதல் 14ம் திகதி வரை ஒரு தொகுதி குருக்களும், 22 முதல் 28 வரை இரண்டாவது, தொகுதி குருக்களும் இத்தியானத்தில் பங்குபற்றுகின்றனர். இத்தியானத்தை வழிப்படுத்தும் குருவுக்காகவும், பங்கு பற்றும் குருக்களுக்காகவும் உங்கள் பங்குகளிலும், குடும்பங்களிலும் செபிக்கும்படி இறைமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.


## ஒளி ஏற்றுவோம் இசைமாலைப்பொழுது



யாழ் பேராலய அரங்கில் பங்குத்தந்தை சகாயநாயகம் அடிகளார் தலைமையில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் ஆசீருடன் ஒளி ஏற்றுவோம் இசைமாலைப் பொழுது 31.10.2009ல் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளிவிழா இசையரங்காக ஜெறோம் புவனேந்திரனின் இசையமைப்பில் யோசப்பாலாவின் பாடல்களை அருட்தந்தையர், பொதுநிலையினர் அரங்கேற்றிய இசை மாலைப்பொழுது மக்கள் மனதில் நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்தது என்பதல் ஐயமில்லை.

## நற்செய்தியைப் பரப்ப புதிய தொழிநுட்ப வசதிகளையும் பயன்படுத்த வேண்டும்

### – பரிசுத்த தந்தை –



திருச்சபை நற்செய்தியைப் பரப்ப புதிய தொழில்நுட்ப வசதிகளையும், புதிய தொடர்புசாதனங்களையும் பயன்படுத்தி நற்செய்தியை பரப்ப முன்வர வேண்டும்.

மேலும் திருத்தந்தை நற்செய்தியின் சாரம் ஒரு போதும் மாறாது. திருச்சபை அந்த நற்செய்தியின் படிப்பினைகளை அல்லது செய்தியை ஊடகங்கள் வழியாக புதிய தலைமுறைக்கு கற்பிக்க அறிதல் வேண்டும். அதே வேளையில் நவீன தொழில்நுட்பம் நவீன தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி நற்செய்தியை போதிக்க முன்வர வேண்டும்.

கத்தோலிக்க செய்திப் பிரிவு

## சின்னம் சூட்டும் விழா

### அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை ஆலயம்



திருப்பாலர் சபை சிறுவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு 17.10.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. இதில் 18 திருப்பாலர் சபைச் சிறுவர்கள் சீன்னங்களை பெற்றுக்கொண்டார்கள். திருப்பாலர்சபை இயக்குனர் அருட்பணி அ.ப. அன்ரனிப்பிள்ளை அடிகளாருடன் பங்குத்தந்தையும் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார். முடிவில் திருப்பாலர்சபை பிள்ளைகளுக்கான ஒன்றுகூடல் நடைபெற்றது. திருப்பாலர்சபை ஊக்குவிப்பாளர்களின் உதவியுடன் பங்குத்தந்தை ஜே. நீக்கிலஸ் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## முதல் பரிசு பெறுகின்றார்



பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சிங்கம் 2008/2009க்கான கவிதைப் போட்டியில் முதல் பரிசை நவாலியை சேர்ந்த மரியதாஸ் மரிய நாயகி (நவாலியூர் நாயகி) அவர்கள் பெற்றுக்கொள்கிறார். இவர் எமது பாதுகாவலன் வாசகர்களுக்கு கவிதைகளை தொடர்ந்து எழுதும் சிறந்த படைப்பாளராவார். இவரது கலை இலக்கிய பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## வத்திக்கானில் விண்ணியல் கலைக் கண்காட்சி

வத்திக்கான் பொருட்காட்சி நிலையத்தில் 2009 விண்ணியல் கலைக் கண்காட்சி ஐப்பசி மாதம் 16ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. அங்கு400 வருடங்கள் பழமைவாய்ந்த விண்ணியல் கலை உபகரணங்கள் கண்ணாடிப் பெட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அதே நேரம் அவற்றிற்கு அருகில் அதையொத்த அதிநவீன உபகரணங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அகில உலக விண்ணியற் கலை முடிவடையும் 2010ம் ஆண்டு தைமாதம் 10ம் திகதி இக் கண்காட்சி முடிவடைய ஏற்பாடாகி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

# நவம்பர்

நவம்பர் மாதம் கூதிர் கால ஆரம்பம். பனிக் குளிர் காலம். மழை மேகங்கள் பூமியை நனைக்கும் காலம். ஓர் நினைக்கும் காலமும் கூட.

யாரை? எதை? என்ற வினாக்கள் இங்கு முக்கியமானவை. வாழ்வு என்ற ஓட்டப்பந்தையத்தில் எங்களை முந்திச் சென்று விட்டவர்களை நினைக்கும் காலமிது.

இவர்களுள் சிலர் வாழ்ந்து முடித்தவர்கள். சிலர் இவ் வாழ்வை வெறுத்து தாமாகவே ஒதுங்கிக் கொண்டவர்கள். சிலர் எம்மை போல வாழ ஆசைப்பட்டும் சாவுக்கு நிர்ப்பந்திக்கட்டவர்கள்.

இவ்வாறு மரணத்தின் நுழைவாயிலை கடந்தவர்கள் - இறந்தவர்கள், அழிந்து போனவர்கள் - மறைந்து போனவர்கள் அல்ல. 'தமது இவ்வுலக வாழ்க்கை கூடாரத்தை இடமாற்றியுள்ளார்கள்' என்பதுதான் எமது கிறிஸ்தவ நம்பிக்கை. அதனால் தான் எமது அன்புள்ளவர்களின் சாவின் - இழப்பின் வலி கடினமானதாயினும், இந்த நம்பிக்கை எமக்கு ஆறுதலளிக்கின்றது. இதுவே இக்காலத்தின் கருப்பொருளுமாகும்.

இறந்தவர்கள் எமக்கு விட்டுச் சென்றவை ஏராளம். அன்பு, பாசம், தியாகம், கனவுகள், இனிய நினைவுகள் - கடன்கள் இவற்றோடு சில காயங்களும் அடங்கும்.

எது எப்படி இருப்பினும் எமது விழித்திரையிலிருந்து மறைந்து போன இவர்களுக்காக - இவர்களின் வாழ்வு - உறவு நிலைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவது - அவர்களை இனி நினைவால் மன்னித்துவிடுவது இன்னும் வாழ்வோராகிய எமது கடமையும் பொறுப்புமாகும்.

''இவ்வுலகில் வாழும்போது என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்' என்கிற இறந்த எம் உறவுகளின் ஓசையற்ற அறைகூவல், அவசரமாக இயங்கிக் கொண்டிருக்கும் எம்மை இம்மாதத்தில் சற்று நிறுத்தி வைக்கிறது. இறந்தவரை நினைத்தல் என்பது, அவர்களை நினைத்து அழுவது - கவலைப்படுவது என்று அர்த்தமல்ல. அவர்களின் விரும்பம் - எதிர்பார்ப்பு - கனவு - இவைகளை நிறைவேற்ற முயற்சிப்பது என்று அர்த்தமாகும்.

எனக்கு வாழக் கிடைத்த அரிய வாய்ப்பை முழுமையாக வாழ்தல் என்று அர்த்தமாகும். இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய வாழ்வோருக்கு உதவுதல் என்று அர்த்தமாகும். இவையே அர்த்தமுள்ள நினைவுகளும் அறிவுபூர்வமான அணுகு முறைகளுமாகும்.

பலரது வாழ்க்கையில், இறந்த உறவுகள் ஏற்படுத்திய வெற்றிடங்கள் என்று உணரப்படும் இடைவெளிகளும் உண்டு. ஆனால் வாழ்வின் நிலையற்ற தன்மையைப் புரிந்து கொள்ள முற்படும் எவருக்கும் இழப்புக்கள் ஏற்படுத்தும் இடைவெளி காலப்போக்கில் மறைந்து போய்விடுகின்றன.

நவம்பர் மாதம் மறு பக்கத்தில், எதை நினைக்கும் காலம் என்ற இன்னொரு வினாவோடு விரிகிறது. மரணம், இன்றைக்கோ நாளைக்கோ கொல்லும் சாவு. அது உன்னையோ என்னையோ யாமறியோம் என்ற பழைய பாடலின் வரிகளில், மண்ணால் பிறந்த ஒவ்வொருவருக்கும் நிகழப்போகும் இறுதி முடிவு அழகாகச் சொல்லப்படுகிறது.

உலகில் வளர்ந்த நாடு ஐக்கிய அமெரிக்கா. அதுவே இயற்கை சீற்றங்களை தடுத்து நிறுத்த முடியாத பட்சத்தில் அதிலிருந்து தப்பிக்க வழியேது என்பதையே அவர்களின் செய்மதி - தொழில்நுட்பம் ஆராய்கிறது.

இது மரணத்திற்கும் பொருந்தும். மரணம் விதிவிலக்கின்றி எவரையும், எந்த நேரத்திலும் காவு கொள்ளும் ஆற்றல் கொண்டது. இந்த தத்துவம், உண்மை, பட்டறிவு, உலகம் தோன்றியது முதல் மனிதன் தெரிந்து கொண்ட ஒன்றுதான். அதனை தடுக்க முடியாது. ஆனால் அதிலிருந்து தப்பிக்க முடியும். அதற்கு வழி என்ன? நன்மைகள் செய்தலும் புது வாழ்வை தேடலுமேயாகும். இதுவே உடல் அழிந்தாலும் நித்திய சாவிலிருந்து நாம் தப்பிக்க ஒரே வழி.

கல்லறைகளை காணும் ஒவ்வொரு வேளையும் சாவு, பயங்கரம் என்பவற்றைவிட, வாழவேண்டும் - அவ்வாழ்வில் விண்ணுலகுக்கு உரியவற்றையே முதலில் தேட வேண்டும் என்ற எண்ணங்கள் மேலோங்க வேண்டும். ஏனென்றால் ''விண்ணுலகில் செல்வங்களை சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியும், துருவும் அழிப்பதில்லை, திருடனும் கன்னமிட்டுத் திருடுவதில்லை'' என்கிறது நற்செய்தி.

விண்ணுலகில் செல்வங்களை சேர்த்து வைக்கும் முயற்சி, முதலில் மரண பயத்திலிருந்து எம்மை விடுவிக்கிறது. உலக வாழ்வின் நிலையற்ற தன்மையை ஆழமாக உணர்த்துகிறது அதில் எமது போட்டி பொறாமை, சண்டை சச்சரவு கோப வைராக்கியம், உலக கவலைகள் என்பவை காணாமலே போய்விடும்.

இவ்வாறு நிலையான வீட்டின் கதவுகளை தட்ட, இக்காலம் ஒரு வாய்ப்பாக அமையட்டுமே.

## வள(னா)ர் பப்பா பதில்கள்

***1. கேள்வி :*** *வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் அடைத்து வைக்கப்பட்ட அகதிகளை துரையப்பா விளையாட்டரங்கு, மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானம் என்று கொண்டு வந்து இறக்கப்படுவது பற்றி உமது கருத்து என்ன?*

மாலதி, வினான்

**பதில் :** அங்கு நடந்தது ஒரு மரண விளையாட்டுத்தானே. விளையாட்டொன்று, விளையாட்டு மைதானத்தில் முடிவுற்றிருக்கிறது. மறுபிறவிகளாக சில ஆடித் தள்ளுபடிகளுடன் வந்திருக்கிறார்கள்.

***2. கேள்வி :*** *வாழ்க்கையில் கவலைப்படலாமா?*

சர்மிளா, நாவாந்துறை

**பதில் :** 'எதைக்குறித்தும் கவலைப்படாதீர்கள்' என்பதுதான் பொதுவான அறிவுரையாக இருக்கிறது. ஆனால் நான் சொல்கிறேன் கவலைப்படுங்கள்! - மற்றவருக்கு எதைக் கொடுக்கலாம் என்பது குறித்து கவலைப்படுங்கள் (இதை கேட்கவே கவலையாக இருக்கிறதா?)

***3. கேள்வி :*** *இறந்த ஆன்மாக்களுக்காக நாம் செய்யும் வேண்டுதலால் பயன் ஏதும் உண்டா?*

கில்லறி, குருநகர்.

**பதில் :** திருச்சபையில், விண்ணுலக திருச்சபை (புனிதர்கள்) பயணம் செய்யும் திருச்சபை (உயிரோடு உள்ள நாம்) கீழுலக திருச்சபை (இறந்தவர்கள்) என்று மூன்று நிலை உண்டு. இதில் இறந்த ஆன்மாக்களில் பெரும்பாலும் உத்தரிப்பு ஸ்தலமாகிய கீழுலக திருச்சபையில் இணைந்து கொண்டு தமது பாவங்களுக்கு பரிகாரம் தேடுவார்கள். அப்போதும் எமது வேண்டுதல் அவர்கள் மோட்சம் சேர துணைபுரிகிறது, என்பது திருச்சபையின் நம்பிக்கையும் போதனையும். இறந்தவர்களின் அன்பை என்றும் நன்றியோடு நினைக்கவும் இவ் வேண்டுதல் உதவுகிறது அல்லவா?

***4. கேள்வி :*** *அன்புள்ள வளனாரே, மறையுரையின் போது பல குருக்கள் இறைவார்த்தைகளை மேற்கோள் காட்டி மறையுரை ஆற்றாமல், உதாரணங்கள், சம்பவங்கள், கதைகள் என்று அடுக்கிக்கொண்டே போகிறார்களே? அது சரியா?*

சேவியர், யாழ்ப்பாணம்.

**பதில் :** உமக்கு நல்ல சமாரியன் உவமை பிடிக்குமா? ஊதாரிப்பிள்ளை உவமை விருப்பமா? தாலந்து உவமை எப்படி? இவையெல்லாம் வேறுயாருமல்ல, போதகர்களுக்கெல்லாம் போதகரான இயேசு சொன்ன உவமைகள் தாம். போதனைகளில் உவமை, கதை சம்பவங்கள் கூடாதென்றால இவையெல்லாம் இன்று நமக்கு கிடைத்திருக்குமா? விண்ணரசின் விழுமியங்களை விளக்க இயேசு கையாண்ட உத்திகளில் உவமை முக்கியமானது. காலத்தின் அறிகுறிகளை சரியான முறையில் தொடர்புபடுத்தி அதற்கேற்ப இறைவார்த்தையை உடைப்பதுவே உண்மையான மறையுரை. அதற்காக வெறும் சம்பவங்களின் தொகுப்பும் மறையுரையாகாது.

***5. கேள்வி :*** *வளனாரே திருமண திருப்பலிக்கு திகதி, நேரம் குறிக்கும் உரிமை யாருக்கு உண்டு? பங்கு தந்தையர்களுக்கா? திருமண வீட்டாருக்கா?*

மதி, நல்லூர்.

**பதில் :** இது 'காஷ்மீர்' இந்தியாவுக்கா, பாக்கிஸ்தானுக்கா என்ற உரிமை பிரச்சனை போன்றது அல்ல. இது ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் அணுகப்படும் விடயமே. இரண்டு சாராருக்கும் வசதியான நேரத்தை, சம்பந்தப்பட்டவர்கள், நேரடியாக, நேர காலத்தோடு பேசிக் குறித்துக் கொண்டால் இது ஒரு பிரச்சனையே அல்ல.

***6. கேள்வி :*** *அன்புள்ள வளனாரே கொடியசைந்ததும் காற்று வந்ததா? காற்று வந்ததும் கொடியசைந்ததா?*

தமிழினி, குருநகர்.

**பதில் :** ஏதோ ஒன்று முதலில் வந்தது. அதனால் மற்றையது இரண்டாவதாக வந்தது. அது எதுவாகத் தான் இருந்தாலும் உமக்கென்ன?

**குறிப்பு :-**

இவ்வினா விடை பகுதி நேயர்களே, உங்கள் வினாக்களை ''வளனார் பப்பா பதில்கள், த.பெ.இல.02, பாதுகாவலன் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். வினாக்கள் பிந்தி வந்து சேர்வதனால் அவற்றை உடனடியாக பிரசுரிக்க முடிவதில்லை. எனவே நேரகாலத்தோடு வினாக்களை அனுப்பி வையுங்கள்.

## சிந்தனைத் தூறல்கள் - 03

அப்துல் ரகுமானின் **சிறகுகளின் நேரம்**

### திறந்த புத்தகங்களும் பாம்புப் புற்றுகளும்

பர்மாவில், மனித நாகரீகத்தை விட்டு நெடுந்தொலைவில், காட்டுக்குள் ஓர் ஆதிவாசிக் கூட்டம் வசிக்கின்றது.

சொன்னால் நம்பமாட்டீர்கள். போர் என்றால் அவர்களுக்கு என்னவென்றே தெரியாது.

அவர்கள் தங்களுக்குள்கூடச் சண்டைபோட்டுக்கொண்டதே கிடையாது. இதைவிடப் பெரிய அதிசயம், அவர்கள் கனவில்கூடத் தப்பாக நடந்து கொள்வதில்லை.

இது எப்படி முடியும் என்று கேட்கலாம்.

ஏனென்றால், கனவு என்பதே தப்பாக நடப்பதற்கு உண்டான இடம்தான்.

உளவியல் அறிஞர் சிக்மண்ட். ப்ராய்ட், 'மனிதன் அடக்கிவைக்கப்பட்ட தன் அந்தரங்க ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளும் இடம்தான் கனவு' என்றார்.

இந்த உலகத்தில் நாம் நினைப்பதை எல்லாம் பேசமுடியாது: நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது.

சமூகம் நம்மை பலவகையில் கட்டுப்படுத்துகிறது.

நாமும் ஊர் என்ன நினைக்குமோ என்று பயந்து நம்முடைய பல ஆசைகளை அடக்கிக்கொள்கிறோம்.

இந்த ஆசைகளில் தப்பான ஆசைகளும் இருக்கும்.

இப்படி அடக்கப்பட்ட ஆசைகள் அழிந்து விடுவதில்லை.

இவை ஆழ்மனதிற்குள் போய் ஒளிந்துகொள்கின்றன.

திருடர்கள் இருட்டில் வெளியே வருவதுபோலக் கனவில் வெளிப்படுகின்றன.

எந்தக்கட்டுப்பாடும் இல்லாமல் இஷ்டப்படிஆடுகின்றன.

கனவு, மனிதனின் அந்தரங்க அறை. அங்கே அவன் தான் விரும்பிய பெண்ணை எந்தத்தடையுமின்றி அனுபவிக்கின்றான்.

யாரையாவது அவன் வெறுக்கின்றான் என்றால் பயமில்லாமல் அவனைக் கொலைசெய்கின்றான். கனவு தணிக்கை செய்யப்படாத திரைப்படம் சில நேரங்களில் நீலப்படம் ஆழ்மனம்தான் அதன் இயக்குநர். தயாரிப்பு, கதை, வசனம், பாடல், ஒளிப்பதிவு எல்லாமே அதுதான். சில நேரங்களில் நம் கனவில் நாம் நடப்பதைப் பார்த்து நாமே சங்கடப்படுவோம்.

'என்ன இந்தப் பெண்ணிடம் இப்படி நடந்துகொள்கிறோமே' என்று நினைப்போம்.

ஆனால், எங்கோ, எப்போதோ அப்படி ஓர் ஆசை நமக்கு இருந்திருக்கும் அது தான் அரங்கேறுகிறது.

உருதுவில் ஒரு கதை.

'என் கனவுக்குள், என் அனுமதியின்றி நீ எப்படி நுழைந்தாய்?. என்று காதலன் கேட்கிறான்.

' இது என் வீடு. இதில் நுழைய நான் யாரிடம் அனுமதி கேட்க வேண்டும்?. என்கிறாள் காதலி.

கனவு யாருடைய தொந்தரவும் இல்லாமல் காதலர்கள் சந்திக்கும் இடம்.

கனவு ஒரு மந்திர உலகம். அங்கே நம்மை வெறுக்கும் பெண் கூட நம்மை காதலிப்பாள்.

பெண் கனவுகளால் ஆனவள். கனவு அவளுக்கு மிகவும் பாத்தியதையான இடம். உருதுக் கவிதை அதைத்தான் சொல்கிறது.

கனவு சொர்க்கமாகவும் இருக்கிறது: நரகமாகவும் இருக்கிறது. கனவு ஒரு அதிசயக்கண்ணாடி. அதில் மனிதன் எதை மறைக்கிறானோ அதைக்காண்கிறான்.

கனவு மனிதன் தப்பாக நடப்பதற்கென்றே ஏற்பட்ட இடம் அப்படி இருக்கும் போது பர்மா ஆதிவாசிகள் கனவில் கூட தப்பாக நடப்பதில்லை என்பதை எப்படி நம்புவது?

நம்புவதற்கு கடினமாக இருந்தாலும் உண்மை அது தான்.

அதற்கு காரணம் அவர்களுக்கு ஆசைகளை அடக்க வேண்டிய அவசியமே இல்லை.

(தூறல் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## தாயன்பு

அழகான மனையிருந்தும்
மகிழ்வான இடமிருந்தும்
சீராட்ட உறவிருந்தும்
பசியாற உணவிருந்தும்
தாலாட்டத் தாயில்லையே!

உணர்வுகள் மாறலாம்
காலங்கள் கடக்கலாம்
உறவுகள் கூட மறக்கலாம்
உண்மையான தாய்ப்பாசம் அழியுமா?

இ. யூட் நிலோஜன்
புனித யாகப்பர் ஆலயம்
இளவாலை.

## அன்னை

கருவறை தொடக்கம் கல்லறை வரை
இன்பத்திலும் துன்பத்திலும்
இரண்டறக் கலந்த தெய்வமே - தாய்

அன்பின் இருப்பிடமாய் அரவணைப்பின் - சிகரமாய்
வாழ்வின் சரித்திரமாய் வாழ வைக்கும்
தெய்வமே - தாய்

உணவை ஒறுத்து தன் உடலை வெறுத்து
பாலூட்டி சீராட்டி பக்குவமாய்ப் பார்க்கும்
தெய்வமே - தாய்

ஆ. சிறோன் டெஸ்மன்
புனித யாகப்பர் ஆலயம்
இளவாலை.

## இளைஞர்களே! கொஞ்சம் கேளுங்கள்

செபவாழ்வு ஒரு புதுவாழ்வு - அதில்
இன்பம் காண்பது புனித வாழ்வு
ஆயுதம் அல்ல கைத்தடியும் அல்ல - உனக்கு
வாழ்வு தருவது இறைவார்த்தையே

அழகியும் அமுதமும் இன்பம் தருவன அல்ல
அழகு தூய்மை நிறை உள்ளத்தைக் குளிக்கின்றனவே
உன் பார்வையில் ஒரு பார்வையால் - உனக்கு
வாழ்வு தந்தவரைப் பார்த்திடு

புழுதி போல் மறைந்திடும் இவ்வுலகை வாழ்க்கையில்
புதுமை நிறை இயேசுவின் பணிதனை
புவியோர்க்கு எடுத்துரைக்க - இன்றே
புறப்படு இளைஞனே இன்றே புறப்படு

ஜொபின்சியா குருநகர்,

## நான்

நான் எனும் அகந்தையால்
நாநிலத்தில் என்றும் – மனிதன்
சோகச்சுமை கொண்டு
சோர்வின்றி வாழ்ந்ததில்லை

பாவம் பதற்றத்தினால் – என்றும்
பரிதவித்த மானிடர்கள்
பல்லாண்டுகள் வாழ்ந்திடவே
சிலகாலம் சிறைப்பட்டனர்

போதும் வியப்பு – என்று
பொதுநூல்கள் கூறினாலும்
நான் எனும் அகந்தையால்
நல்ல நிலை அடைந்ததில்லை

அ. கிறேக்கர்
புனித வளனார் வீடுதி, இளவாலை.

# துன்பவேளைகளும் கடவுளின் ஆசீர்வாதமே!

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

**முகவுரை :**

மானிட பிறப்பு ஒன்றின் நாளிகையோடு எப்படி வாழ்வு ஏட்டில் பிறக்காதோ, அதனோடு கூடப்பிறந்து வருவதே துன்பம் என்னும் ஒரு வாழ்வியல் அனுபவம். அதிலும், இந்த நாட்கள் பொல்லாத நாட்கள். துயரம் நெஞ்சை சற்று அதிகமாகவே சுடும் நாட்கள். சாவுகள் ஏற்படுத்தியிருக்கும் வலிகள், சொந்தங்கள் அனுபவிக்கும் சிறைவாழ்க்கை, தேடிய(வை)வர்கள் கைபறிந்துபோன நிர்க்கதி நிலை, இனி என்ன நடக்குமோ என்ற எதிர்காலம் பற்றிய அச்சம்.... இத்தகைய துன்பங்கள் கடவுள் அனுப்பும் தண்டனைகளே என்று பெரும்பாலான மக்கள் எண்ணித் தமது துன்பங்களை இரட்டிப்பாக்குகின்றார்கள். எஞ்சியிருக்கும் மக்களுள் மிகச் சிலரே இத்துன்பவேளைகள் கடவுளுடைய திட்டத்தின்படி நம்மைப் புடமிட்டுத் தூய்மைப்படுத்தும் காலமாகவோ, கடவுளுடைய ஆசீர்வாததின் காலமாகவோ, நாம் மீட்பின் பலன்களை அடைந்துகொள்ளும் காலமாவோ நாம் கடவுளில் தங்கியிருக்கும் காலமாகவோ இருக்கலாம் என்று கருதுகின்றனர். விவிலியத்தில் வரும் 'மகனயிம்' துன்பியலில் மூழ்கியிருக்கும் பெரும்பான்மை மக்களுக்குச் சிறப்பான ஓர் அழைப்பு விடுகின்றது.

**மகனயிம் :**

''மகனயிம்" என்ற பெயர் ''இரட்டைப் பாசறை" எனப்பொருள்படும். இது இரு படைகளின் இடம், இறைவன் தங்கும் இடம். இவ்விடங்களில் ஒன்று இறைவனுக்குரியது, மற்றது யாக்கோபுக்கு உரியது. இவ்விடத்தில் எமக்கும் ஒரு பங்குண்டு. இறைவனுக்கு ஒரு பாசறையாக இது இருப்பதற்கு மேலாக, ஆன்மீக சந்திப்புக்குரிய ஓர் இடமாக இது இருக்கின்றது. இந்த இடத்தில்தான் இயலுலகில் நாம் காண்பவற்றில் தங்கியிராமல் இறைவனில் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ள வேண்டும். இயற்கையில் எமது கண்கள் எம்மைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லலாம். இயற்கைக்கு அப்பால் எப்படிப் பார்ப்பது என்பதை நாம் கற்றுக்கொண்டாலன்றி அச்சமும் ஐயமும் எமது வாழ்வில் புகுந்து விடும்.

''பின்னர் யாக்கோபு தமது பயணத்தைத் தொடர்ந்தார். கடவுளின் தூதர்கள் வழியில் அவரைச் சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது, ''இதுதான் கடவுளின் படை" என்று கூறி, அந்த இடத்திற்கு ''மகனயிம்" என்று பெயரிட்டார்" (தொ.நூ. 32:1-2).

**யாக்கோபின் - செபம் :**

யாக்கோபு தாம் இடரினின்று விடுவிக்கப்படுவதற்காகச் செபித்தார். அவர் இறைவனது வாக்குறுதியை மறக்கவில்லை. அதே சமயத்தில், ஆண்டவருக்கு அதை நினைவூட்டினார். தமது அச்சங்களை ஒப்புக்கொண்டு, தமது தகுதியின்மையை அறிக்கையிட்டார்.

ஆபத்திலிருந்து விடுவிக்கப்படும்படியாக யாக்கோபு செபித்தபோதிலும், தேர்ந்தெடுத்த விலங்குகளைக் கொடுத்து, அவரைச் சாந்தப்படுத்த வேண்டுமென்று கடவுள் நினைத்தார். இது நிலைமையைச் சரிப்படுத்தக்கூடும் என நம்பினார். தன் சகோதரனின் மனதை இறைவனது வாக்குறுதிகளில் தங்கி நிற்கிறோமா, அல்லது எமது மனதின் ஒரு பகுதி நிலைமையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பார்க்கின்றதா? இந்த சந்தேகத்தின் மத்தியில் இறைவனால் செயற்படமுடியாது.

''யாக்கோபு 'நான் அவர் முன்னே இவ்வன்பளிப்புக்களை அனுப்பி அவரை அமைதிப்படுத்துவேன். பின்பு நான் அவரை நேரில் காணும்பொழுது, அவர் ஒருவேளை என்னை ஏற்றுக்கொள்வார்' என்று நினைத்தார்" (தொ.நூ. 32:20).

**தூதருடன் போர் :**

ஆனால், யாக்கோபு இறைவனுடன் தனித்துவிட்டார் (தொ.நூ. 32: 24-29). அங்குதான் அவர் ஆண்டவரின் தூதரோடு போரிட்டார். அவரது ஆசீர்வாதம் கிடைக்கும் வரை யாக்கோபு அவரைப் போகவிடவில்லை. வெளிப்பராக்குகளுக்கு நாம் ஆளாகும்வரை ஆண்டவரோடு தனித்திருக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்காது. இது அலகையினுடைய திட்டம். இறைவனை இன்னும் நன்கு அறியும் பொருட்டு நாமும் யாக்கோபைப் போல் அவருடன் போராட வேண்டியிருக்கும். உங்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களை வலிந்து கேளுங்கள். நாம் கடவுளது வாக்குறுதிகளை பரிசோதித்துப் பார்த்து, எம்மால் தனித்து ஒன்றுமே செய்யமுடியாது என்பதை உணரவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார்.

**யாக்கோபின் பிடிவாதம் :**

'என்னைப் போக விடு; பொழுது புலரப் போகிறது' என, யாக்கோபு, ''நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்" என்றார் (தொ.நூ. 32:26).

பல சமயங்களில் இதே செயற்பாட்டைப் பின்பற்றி, இறைவன் எம்மை ஆசீர்வதிக்கும்வரை அவரைப் போகவிடமாட்டோம் என்று சொல்ல வேண்டியிருக்கும். யாக்கோபைப் போல அது எமது கால்களை முடமாக்கலாம். ஆனால் அதன் பயனாக அதிக வலிமை பெறுவோம். தமது தளராத உறுதியின் காரணமாகவே யாக்கோபு ''இஸ்ரயேல்" என்று தமது புதிய பெயரைப் பெற்றுக்கொண்டார்.

இறைவன் தம் பிள்ளைகள் எல்லோருக்கும் பெயர்கள் வைத்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அவர் ''உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, 'இஸ்ரயேல்' எனப்படும். ஏனெனில், நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" என்றார் (தொ.நூ. 32: 28).

**வெற்றியளித்த போராட்டம் :**

ஏமாற்றுக்காரராயிருந்த யாக்கோபு 'கடவுளோடு போராடியவர்' என்னும் பெயரைப் பெற்றார். ஏனெனில், அவர் இறைவனோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்றார். அவரது வாழ்வில் முனைப்பாக இருந்த பல போராட்டங்களில் அவர் வெற்றி கொண்டார். எமக்கும் இத்தகைய போராட்டங்கள் உண்டல்லவா? இறைவனால் மட்டுமே கடின இதயங்களை மாற்ற முடியும் என்பதை மறக்கவேண்டாம். யாக்கோபு, ஏசாவுடனும், தன் தந்தை ஈசாக்குடனும், தன் மாமனாகிய லாபானுடனும், தன் மனைவியர் லேயா, ராக்கேல் ஆகியோருடனும், ஈற்றில், 'கடவுளின் திருமுகம்' எனப் பொருள்படும் பெனியல் என்னுமிடத்தில், இறைவனுடனும் சண்டையிட்டார். இறைவன் அப்போது தூரத்திலிருக்கவில்லை. இங்குதான் யாக்கோபு இறைவனை அறிந்தார். சில சமயங்களில், இறைவனை முகமுகமாய்க் காண்பதற்கு அவரோடும் மனிதரோடும் போராடவேண்டிருக்கிறது. இறைவன் தம்மை வெற்றிக்கு வழி நடத்திச் செல்வார் என்று யாக்கோபு நம்பிய போது, தன் சகோதரனின் மனதை இறைவன் மாற்றியிருப்பதைக் கண்டார். யாக்கோபு ஏசாவின் முகத்தை நோக்கியபோது இறைவனின் கரம் அவர் மீதிருக்கக் கண்டார். ஏசாவின் முகத்தில் இப்போது பகைமை உணர்வு காணப்படவில்லை. சகோதர அன்பே காணப்பட்டது.

யாக்கோபு, ''இல்லை. உமது பார்வையில் எனக்குத் தயை கிடைத்திருப்பது உண்மையானால் நான் தரும் அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளும். உமது முகத்தைக் காண்பது கடவுளின் முகத்தைக் காண்பதுபோல் இருக்கிறது. ஏனெனில், நீர் எனக்குக் கனிவு காட்டியுள்ளீர்" என்றார் (தொ.நூ. 33:10).

இது எம் ஒவ்வொருவருக்கும் ஓர் அரிய பாடமாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாகத் தோன்றினாலும், இறைவன் எம்மை மகனயிமிலிருந்து விடுவித்து பெனிபெலில் தமது பிரசன்னத்துக்குக் கொண்டு வருவார் என்ற விசுவாசமும் நம்பிக்கையும் எமக்கு இருக்கவேண்டும். நாம் அவரை ஆதாரமாகக் கொண்டால் இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை.

இறைவனது வல்லமையில் நம்பிக்கை வைத்திருக்கும்போது, அச்சத்தை அல்ல, அமைதியையே அனுபவிப்போம்.

**முடிவுரை :**

ஒருவர் தனது வாழ்வில் பல தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டாலும், ''மகனயிம்" பற்றிய செய்தியை விசுவசித்தால், தொல்லைகள் மிகுந்த இக்காலத்தை சோதனையின் காலமாகவும், அதேவேளை, ஆசீர்வாதத்தின் காலமாகவும் அவர் கருதுவார். இறைவன் எம்மை இப்போது இந்த நிலைமைக்கு உட்படுத்தியிருப்பது, எம்மை முன்னிலைக்கு கொண்டு வருவதற்கே ஆகும் என நம்புவார். ஒருவர் தாம் எதிர்கொள்ளும் துன்பங்களிலும் இறைவனுக்கு ஒரு திட்டம் உள்ளது என்பதை நம்பி வாழும் போது, இறைவனது வாக்குறுதிக்கு அவர் வாழ்க்கை உயிருள்ள சாட்சியமாக இருக்கின்றது. கிறிஸ்தவ வாழ்வு என்பது உரமற்ற இதயம் உள்ளவர்களுக்கல்ல. அதனால்தான், எந்நேரமும் இறைவனையே ஆதாரமாகக் கொண்டு, முக்கியமாக, இடர்நிறைந்த வேளைகளில், அவரில் தங்கிநின்று, அவரில் நம்பிக்கை வைக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

# கோவா திருயாத்திரை

– தவத்திரு. ம.இ. பயஸ் –

இவ்வாண்டு குருக்களின் புனித ஆண்டாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதால், திருயாத்திரைக்கான அழைப்பானது முத்திப்பேறு பெற்ற மகா வந்தனைக்குரிய யோசேப்பு வாஸ் அடிகளாரின் தேசியப்பணி நிலையத்தின் ஊடாக இலங்கைக் குருக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஐப்பசி மாதம் 2ம் திகதி (2009ல் சென்னை (இந்தியா) விமான நிலையத்தில் இறங்கி, தொடர் உந்து மார்க்கமாக 3ம் திகதி 4.30 மணிக்கு கோவா நகரம் சென்றடைந்தோம்.

இலங்கையின் ஏழுமறை மாவட்டங்களிலிருந்து சென்ற 10 குருக்களையும், 9 பொது நிலையினரையும் கோவா பேராயர் (Patriach Rev. Philip Neris) அன்போடும் பண்போடும் வரவேற்று உபசரித்து நீண்ட நேரம் உரையாடினார் பிலார் சபைக் குருமடத்தில் தங்கினோம்.



4ம் திகதி காலை பெனாலிம் என்ற கிராமத்தில் முத்திப்பேறுபெற்ற அதி வண. யோசேப்புவாஸ் அடிகளார் 21.04.51ல் பிறந்த தாய்வழி வீட்டைப் பார்வையிட்டோம். அவர் சேர்க்கப்பட்டிருந்த பங்குக்கோவிலையும், திருமுழுக்குப் பெற்ற தொட்டியையும் தரிசித்து, அவர் திருச்சபையின் புனிதர் பட்டியலில் விரைவில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று தமிழிலும், சிங்களத்திலும், கொங்கணி மொழியிலும் செபித்தோம். வண. அடிகளார் வளர்ந்த தந்தையின் வீடு கோவையில் (8ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு ஜூன் 2009 - ஜூன் 2010



## ஆண்டவரே, எமது குருக்களை விசுவாசமுள்ளவர்களாக்கும்

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

– அருட்பணி. ம. டேவிற் –

தமது தாயார் அதிகாலையில் தம்மை எழுப்பி, உடை அணிவித்து, இறைவன் அவருக்கு சிறிய கைகால்களைக் கொடுத்திருப்பதால் தினந்தோறும் இறைவனுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று தமக்குச் சொல்வது வழக்கம் என்றும் கூறியுள்ளார். பின்பு தோட்டத்தில் போய் பூக்களைப் பறிப்பதற்கு ஒரு சிறிய கூடையை அவரிடம் கொடுப்பார். அவர் திரும்பி வரும்போது தாயார் கோயிலுக்குப் போக ஆயத்தமாக இருப்பார். ஒரு கையால் தாயாரின் கரத்தைப் பற்றிக் கொண்டு, மறு கையில் இறைவனுக்காகப் பறித்த மலர்களை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு சென்றது அவருக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஆலயத்திற்குள் பிரவேசித்ததும், நடுக் கோயிலில் முழந்தாழிட்டு மகனையும் அவ்வாறு செய்யப் பழக்குவார். முழந்தாளில் இருந்தபடி திவ்விய நற்கருணையைக் காட்டி "அவர் தான் உனது வாழ்வின் நிலைக்களனாதகிய இயேசு கிறிஸ்து" என்று சொல்லிக்கொடுப்பார். இதுவே தமது விசுவாசப் பயணத்தின் ஆரம்பமாக அமைந்தது என்று அருட்தந்தை அகஸ்தீன் வல்லூரான் கூறியுள்ளார். தமதுதாயார் இறந்த போது அது தமது வாழ்வில் மறக்க முடியாத ஒரு நாளாக அமைந்ததென்று அவரது இறுதிச்சடங்கில் திருப்பலி நிறைவேற்றுகையில் விசுவாசமென்னும் புண்ணியத்தை அடைவதற்கு தமது தாயார் எவ்வாறு தம்மை ஆயத்தப்படுத்தினார் என்பதை தாம் நினைவு கூர்வதாகவும் அவர் மேலும் கூறினார். பூட்டாறு இறை தியான நடுநிலையத்தில் திருப்பலியின்போது ஒரு மணித்தியாலயத்துக்கு மேல் அவர் போதிப்பதுண்டு. பிரசங்கம் நீளமாக இருந்தாலும் மக்கள் மிகக் கவனமாக அவருக்கு செவிமடுக்கிறார்கள் திவ்விய நற்கருணையை எழுந்தேற்றம் செய்து திருமணித்தியாலயம் நடத்தும் போது அநேகரின் உள்ளம் தொடப்பட்டு மனமாற்றம் அடைகின்றனர் அநேகர் குணமாக்கப்படுகின்றனர். அவரது பாலப்பருவத்தில் அவரது தாயார் ஊட்டி வளர்த்த விசுவாசத்தினாலும் அந்த விசுவாசத்தை வளர்க்க அவர் மேற் கொண்ட இடைவிடாத முயற்சியினாலுமே அவையனைத்தும் நிகழக் கூடியதாயிருந்தது இந்த விதத்தில் குருக்கள் ஆழ்ந்த கடுமையான இறையியல் உருவாக்கத்தைப் பெற்றவர்களாயிருப்பினும், இவ்வாண்டில் சற்றுத் தாமதித்து தத்தமது வாழ்வில் முக்கியமானவாகளாக இருந்த சிலரது ஆழ்ந்த விசுவாசத்தை கூர்ந்து பார்ப்பது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது.

புனித பவுல் திமோத்தேயுவுக்கு இவ்வாறு தெளிவாகக் கூறுகிறார் : "கடவுளின் மனிதனாகிய நீ.... விசுவாச வாழ்வை இலக்காகக் கொள்" (1திமோ 6:11-12) "கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கையும் அன்பும் கொண்டு என்னிடம் நீ கேட்ட நலந்தரும் வார்த்தைகளை மேல்வரிச்சட்டமாகக் கொள். நமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக்கொள்" (2திமோ 1:13-14) "கிறிஸ்தவனுடைய உள்ளத்தில் அமைதியும் சமாதானமும் இருக்கும், ஆனால் விசுவாசம் விழிப்பாயிருக்கும் வரையில்தான். எம் விசுவாசம் தூங்கும் போது நாம் ஆபத்தில் இருக்கிறோம்" என்று புனித அகுஸ்தீனார் கூறியுள்ளார். எனவே குருக்களிடத்திலே விசுவாசம் ஒரு உண்மையான ஆயுதமாகும். குருவின் கையில் அதுவே முக்கிய கருவியாகும். விசுவாசமற்ற ஒரு குருவைப்போல் பரிதாபத்துக்குரியவர் எவருமில்லை. ஒரு குரு தனது விசுவாசத்தை இழந்துவிட்டால் அவர் ஆர்வமற்றவராய், சோம்பலுள்ளவராய், வெறுமையான வாழ்க்கை வாழ்பவராய், ஒரு இயந்திரம்போல சடங்குகள் வழிபாட்டுமுறைகளை நிறைவேற்றிக்கொண்டு, குருத்துவத்தின் வழக்கமான செயல்களை மேற்கொள்வர். விசுவாசமில்லாது போனால் ஒரு குரு தமது குருத்துவ அழைத்தலில் நிச்சயமாக ஒரு நெருக்கடியை இந்த ஆண்டு குருக்களுக்கென அர்ப்பணிக்கப்பட்டிருப்பதால் தமது விசுவாசத்தை ஆழப்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு சகல குருக்களும் அழைக்கப்படுகின்றனர். விசுவாசம் இறைவனது கொடையாகும். நாம் அனைவரும் இக்கொடைக்காகச் செபிக்க வேண்டியது அவசியம். குருக்களின் இந்த ஆண்டிலே குருக்கள் மட்டுமல்ல அவர்கள் யாருக்காகத் தம் வாழ்வை அர்ப்பணிக்கிறார்களோ அந்த மக்கள் அனைவரும் குருக்கள் தொடர்ந்து தமது விசுவாசத்தில் உறுதிபெறும்படியாக செபிக்க வேண்டும். புனிதர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும் சமகால இறையியல் நூல்களையும் வாசிப்பதன் மூலமும் விசுவாசம் உறுதிப்படுத்தப்படலாம். மேலும், எமது வாழ்வில் நாம் முகங்கொடுக்கும் துன்பங்கள், நெருக்கடிகள் மூலமும் எம் விசுவாசம் தூய்மையடைந்து வலுப்படுத்தப்படுகிறது. இறுதியாக, தமது வாழ்வில் ஆழ்ந்த விசுவாசத்தைக் காட்டும் மக்களின் ஆதரவால் விசுவாம் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே, குருக்களுக்கான இந்த ஆண்டில் குருக்கள் தமது விசுவாத்தை ஆழப்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுநிலையினர் முதன்மையாகத் தமது செபத்தினாலும், இன்னும் அதிகமாக தமது ஆழந்த இறை நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் குருக்களுக்குத் இதற்குத் துணைபுரிய முடியும். ஆழந்த, ஐயமற்ற விசுவாசத்தின் விளை வாக இறைவன் - குருக்கள் - பொதுநிலையினருக்கிடையில் ஒரு கூட்டுப் பங்காண்மை ஏற்படுகின்றது. ஆகவே குருக்களுக்கான எங்கள் நாளாந்த செபம் இவ்வாறு இருக்கட்டும். "ஆண்டவரே, எமது குருக்களை விசுவாசத்தின் சக்திவாய்ந்த கருவிகளாக்கும். தமது உருவாக்க நாட்களிலும் தமது குருத்துவ வாழ்வு முழுவதும் விசுவாசமே தமது அழைததலின் சக்தி மூலம் என்பதை எமது குரு மாணவர் உணரச் செய்தருளும்"

## மூத்த குருக்களே உங்களுக்கோர் கவிதை

வயதினிலே மூத்தோராய் பணியினிலே சிறந்தோராய்
வாழ வழிகாட்டும் ஆன்மீகக் குருக்களே
விசுவாச வாழ்வுதான் உங்களது எடுத்துக்காட்டு
வீறுநடையுடன் தான் மிளிருகிறது உங்கள் சேவை

தள்ளாடும் வயதினிலும் தன்னலமற்ற சேவைதனை
தயக்கமின்றி ஆற்றுகின்றீர்கள் தயவோடு ஏற்றுக்கொண்டு
தந்தையாம் இறை மகனே அன்புடனே பற்றிக் கொண்டு
தவித்திடும் உள்ளங்களைத் தணித்திடச் செய்கின்றீர்கள்

அனுபவமிக்க சேவையினால் அசையாதுள்ளது உங்கள் பணி
ஆன்மீக வாஞ்சைதான் உங்கள் பல ஆண்டு பணியினிற்கு
அல்லும் பகலும் அயராது உழைக்கும் குருக்களே
அன்புடனே நீங்கள் ஆற்றும் பணி மேன்மையானதுவே

உடலினிலே நோய் இருந்தாலும்
உள்ளத்தினிலே உவகை கொண்டு
உரம் கொடுத்து உழைக்கும் உங்களை
உடல் நலத்துடன் பல ஆண்டு பணிபுரிய உளமாற வாழ்த்துகின்றோம்

கல்லும் முள்ளும் தான் உங்கள் கடந்து வந்த பாதை
கண்கண்ட தெய்வங்களாக இருந்தீர்கள் பலருக்கு
கறை படியா உங்கள் உள்ளம் களங்கமின்றி இருக்க
கருணையுள்ள இறைவனிடம் இறைஞ்சுகின்றோம் உங்களுக்காய்

துடிப்பான வயதில் துள்ளிக்குதித்து ஆற்றிய பணியை நினைத்து
துவண்டு போகாதீர்கள் துணிவுடன் தொடருங்கள் உங்கள் பணியினை
துன்பம் வருகின்ற போதிலும் நீங்கள் சோர்ந்து போகாமலிருக்கத்
துதித்திடும் இறைவனை நாம் தினமும் வேண்டியே நிற்கின்றோம்.

திருமதி. செல்வராணி ஞானரட்ணம்
சுன்னாகம்.

## "தலைமைத்துவத்தின் உயர்பண்பு தாழ்மையே!"

– அருட்பணி B. பிறாஜன் –

"உங்களுள் முதன்மையாளராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்" (மத் 20:27) என்ற இயேசுவின் வாக்கானது, நாம் எந்நிலையிலிருந்து தலைமைத்துவத்தை ஏற்றாலும் அ:.து எமக்கு மிகவும் பொருத்தமானதாகவே உள்ளது. ஏனெனில் தலைமைத்துவம் என்பது, ஓர் பதவியை, புகழை, பெருமையை நாடி நிற்பதல்ல; மாறாக ஒருவர், தான் வாழும் சூழலில் எத்தகைய பணிக்குப் பொறுப்பாக நியமிக்கப் பெறுகிறாரோ அவர்கள் மத்தியில் முழுமையான அர்ப்பணிப்போடு தொண்டுபுரிவதாகும் ஆனால், இந்த மனநிலையை தலைமைத்துவம் ஏற்கும் அனைவரும் கொண்டிருப்பதில்லை.

இன்றைய உலகில் இதன் வடிவத்தினை, அதிகாரத்தொனியிலும், அடக்கியாளும் நிலையிலுமே நாம் காண்கின்றோம். எனினும் இந்த மனநிலை ஆளுமைமிக்க தலைமைத்துவத்திற்கு முரணானது. உண்மையில் தலைமைத்துவம் ஏற்போருக்கு தாழ்மையுடனான தியாக மனப்பாங்கு அவசியம். பிறரது தொண்டனாகத் தன்னைத் தாழ்த்துதல் என்பது பலருக்குக் கடினமாகவே இருக்கும். ஆனால், நம் ஆண்டவர் இயேசு அதனையே தம் வாழ்வில் எமக்கு முன்மாதிரியாக நடந்து காட்டியுள்ளார்.

ஆண்டவரும், போதகருமாகிய அவரே ஓர் அடிமையின் தன்மையை ஏற்று சீடர்களின் பாதங்களை தம் கரங்களாலேயே தொட்டுக் கழுவி தாழ்மையின் உயர்நிலை என்ன என்பதை உலகிற்குக் காட்டினார். அதுவே சீடர்களின் தலைமைத்துவ வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி கிறிஸ்துவிற்காக மரணம் மட்டும் தம்மைத் தாழ்த்துவதற்கு உந்து சக்தியாக விளங்கியது.

எனவே பாடசாலைச் சமூகத்தில் தலைமைத்துவத்தை ஏற்று, பணிபுரிய மாணவத் தலைவிகளாக அழைக்கப்பட்ட நீங்கள் அதனை ஓர் பதவியாகக் கருதாது, தாழ்ந்த உள்ளத்தோடும், அர்ப்பணம் மிக்க பணி ஆர்வத்துடனும் அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்களுக்குப் பணிபுரிபவர்களாக விளங்க வேண்டும். இதற்கு உண்மையான அன்புறவு, ஏற்றுக்கொள்ளுதல், மன்னிப்பளித்தல், விட்டுக் கொடுத்தல், கூட்டுறவு, பொறுப்புணர்வு போன்ற நல்விழுமியங்கள் எம்மிலே இயல்பாகவே உருவாக வேண்டும். அவற்றின் வழியாகத்தான் எமது தலைமைத்துவ பண்பும் முழுமை பெறும்.

எனவே தலைமைத்துவம் தாழ்மையை ஏற்க எமக்கு விடுக்கப்படும் அழைப்பு என்பதை நன்குணர்ந்து, எமக்குக் கொடுக்கப்படும் பொறுப்புக்களைப் பிரமாணிக்கத்துடன் செயற்படுத்தி, பாடசாலையினதும், சமூகத்தினதும் வளர்ச்சிக்காகவும், நல் மேம்பாட்டிற்காகவும் உழைக்கவும், அதற்கான அணிகலனாக தாழ்மை என்ற நற்பண்பை அணிந்து கொள்ளவும் கடமையுள்ளவர்களாக இருக்கின்றோம்.

இவ்வாறு அண்மையில் யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி. இல் இடம் பெற்ற மாணவத்தலைவிகளின் புதிய அங்குரார்ப்பண நிகழ்விற்கு திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றி இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் உப அதிபர் அருட்பணி. B. பிறாஜன் அவர்கள் குறிப்பிட்டார்.

**தகவல் : S.M. வுளோறன்ஸ்.**

## ஜான் மரிய வியானின் வாழ்க்கைக் குறிப்பு

- ✦ மே 08ஆம் திகதி 1786 - பிறப்பு
- ✦ 1806 - குருவாக தனது படிப்பைத் தொடங்கினார்.
- ✦ சூன் 23 ஆம் திகதி 1815 - திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- ✦ ஆகஸ்ட் 13ஆம் திகதி 1815 - குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- ✦ பிப்ரவரி 13ஆம் திகதி 1818 - ஆர்ஸ்க்கு வந்து தனது பணியைத் தொடங்கினார்.
- ✦ 1821 - ஆர்ஸின் பங்கு தந்தையாகப் பொறுப்பேற்றார்.
- ✦ 1824 - Providence Heuruயைத் தொடங்கினார். பின்னர் இது Brother of the Holy Family of Bellyயிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ✦ 1859 - ஆகஸ்ட் 4ஆம் திகதி, கடுமையாக சோர்வடைந்த புனித ஜான் மரிய வியானி அவருடைய அறையில் உயிர் நீத்தார்.
- ✦ ஜனவரி 08ஆம் திகதி 1905 திருத்தந்தை X ஆம் பத்திநாதர் அவரால் முத்தி பட்டம் தரப்பட்டது. அன்று அவர் பிரான்ஸ் குருக்களின் பாதுகாவலர் என அழைக்கப்பட்டார்.
- ✦ மே 31ஆம் தேதி 1925 - புனிதராக அறிவிக்கப்பட்டார்.
- ✦ 1926 - அகில உலக மறைமாவட்டத்தின் குருக்களுக்கு பாதுகாவலராக அறிவிக்கப்பட்டார்.
- ✦ அக்டோபர் 6ஆம் திகதி 1986 ஆர்ஸ்யை புனித இடமாக தெரிவிக்கப்பட்டது.
- ✦ 2009 ஆம் ஆண்டு புனித மரிய வியானியின் 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். இதை முன்னிட்டுத் திருத்தந்தை அவர்கள் இவரை அகில உலக குருக்களுக்கும், பாதுகாவலராக அறிவித்தார்.

அறிந்து கொள்ளுங்கள்

## இறைவாக்கு உரைப்பவர்கள் யார்?

- ★ இறைவாக்கு உரைப்பவர்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டு மக்களிடையே அனுப்பப்படுபவர்கள்.
- ★ கடவுளின் ஆவியையும், அருட்கொடைகளையும், பெற்றிருப்பவர்கள்.
- ★ கடவுளின் வார்த்தைகளை மக்களுக்கு போதிப்பர்கள்.
- ★ கடவுளின் விருப்பத்தை வெளிப்படுத்துபவர்கள். எனவே இவர்களை "கடவுளின் வாய்" என்ற சிறப்புப் பெயர் இவர்களை சாரும்.
- ★ உண்மைக்காகவும், நீதிக்காகவும் போராடுபவர்கள்.
- ★ துன்பங்களையும், வேதனைகளையும் மனமுவந்து ஏற்று இறைவனுக்காக உயிரையும் துறப்பவர்கள்.
- ★ சமூக நீதிகளையும், தவறு செய்பவர்களையும் கண்டித்து மனமாற்றத்து அழைத்து டிசல்பவர்கள் தான் இந்த இறைவாக்கு உரைப்பவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களை நன்றாக வாசித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை தியானித்து அதன் பின்னர் இந்த சிந்தனைத்துளிகளை தியானத்தோடு வாசித்தால் நற் பயன் பெறலாம்.

## பொதுக்காலம் 32 ஆம் வாரம்

1 அரசர்கள் 17:10-16, எபிரேயர் 9:24-28 மாற்கு 12:38-44

### முழுமையான காணிக்கை

இறைமகன் இயேசுவின் புனித நாமத்தில் எனது பிரியமான உடன் பிறப்புக்களே! கடந்த இரு வாரங்களும் இறையாசீரால் எந்தவொரு குறையும் இல்லாமல் சந்தோஷமாக கடந்திருக்கும் என நம்புகின்றேன். எதிர்வரும் இரு வாரங்களுக்குமான ஞாயிறு மறைத்துளிகள் மூலம் மீண்டுமொரு முறை சந்திப்பதில் மகிழ்ச்சி. இறைவார்த்தைக்குள் உங்களுடைய வாழ்க்கையை கட்டி எழுப்பிக் கொண்டிருக்கின்ற உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக!

**முதல் வாசக திருப்பொழிவு :**

கரிய நிறமுள்ள பறவையாகிய காகம் அன்றைய சமுதாயத்திலே சபிக்கப்பட்ட பறவையாக கருதப்பட்டது. ஆனால் கடவுள் தமது ஆசீர் நிறையப் பெற்ற எலியா இறைவாக்கினரை போஷிக்க அதனைத்தான் தெரிந்து கொள்கின்றார். அதே போலவே சமுதாயம் "வாழ்க்கை கெட்டவள்" என ஒதுக்கி வைத்த விதவைப் பெண்ணையும் அவரை உபசரிக்க தெரிந்து கொள்கின்றார். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் கடவுள் பார்வையில் தீண்டத்தகாதது என ஒன்றுமில்லை.

**இரண்டாம் வாசக திருப்பொழிவு :**

ஆதாம் ஏவாள் மனித உடலைத் தாங்கி அந்த உடலின் உந்துதலுக்கு இடம் கொடுத்து கடவுளின் கட்டளையினை மீறி கீழ்ப்படியாமை எனும் பாவத்தினை செய்தது எமக்கு தெரியும். அந்த கீழ்ப்படியாமை என்னும் பாவத்திற்கு நிரந்தரமான பரிகாரமாக கடவுளின் மகனாகிய கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி அடிமையின் தன்மை பூண்டு மனித உடல் எடுத்து எமது ஆதித்தாய் தகப்பன் மனித உடலில் கட்டிக் கொண்ட பாவத்திற்கு பரிகாரமாக தன்னை ஒப்புக்கொடுத்து எம் எல்லோரையும் மீட்க சிலுவையில் இறந்து உயிர்த்தெழுந்து எமக்கு பரிந்து பேசுபவராக தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கின்றார். எம்மை புண்ணிய வாழ்வில் கால் பதிக்க இடைவிடாது அழைக்கும் கிறிஸ்து நியாயங்களை வழங்கும் நீதித்தேவனாக வரும்போது நாம் அவரது முன்னிலையில் விண்ணரசுக்கு ஏற்புடையவராக அவரை எதிர் கொள்ள வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

**நற்செய்திப் பொழிவு :**

இயேசுதான் வாழ்ந்த காலத்தில் இருந்த மறைபோதகர்களினதும் அவர்களுடைய கெட்ட எண்ணங்களையும் அடிக்கடி சாடுகின்றார். அவர்கள் எப்போதும் செல்வந்தர்களை சார்ந்து நின்று ஏழைகளை வதைப்பவர்களாக இருந்தனர். அவர்களுடைய வெளிவேட வாழ்க்கையால் சமுதாயத்தில் உயர்ந்த இடமும் நன்மதிப்பும் பெற்று தம் குற்றங்களை மறைக்கும் கவசமாக அந்த உயரிய பதவிகளை பாவித்தனர். அவர்களுடைய வெளி வேடத்திற்கான தண்டனையை ஆண்டவர் இயேசு பகிரங்கமாக அறிவிக்கின்றார். அதேபோல அந்த ஏழைக் கைம் பெண்ணின் காணிக்கைதான் உயர்ந்தது எனக் கூறி காணிக்கைகள் பெரிதோ, சிறிதோ, பெறுமதி மிக்கதோ பெறுமதி அற்றதோ என்பது கடவுளின் பார்வையில் அவசியமற்றவை, ஆனால் அவை என்ன நோக்கோடு கடவுளின் பாதத்தில் படைக்கப்பட்டது என்பது தான் முக்கியமானது என இயேசு எடுத்துக் கூறுகின்றார்.

**மறையுரைப் பொழிவு**

அன்பானவர்களே, இன்றைய ஞாயிறு வாசகங்கள் எல்லாவற்றிலும் விதவை அல்லது கைம்பெண் (Widow) - கணவனை இழந்தவர், எனும் இந்த வார்த்தையைக் காணக் கூடியதாக உள்ளது. முதலாம் மூன்றாம் வாசகங்களில் இவ்வார்த்தை வெளிப்படையாகவும் இரண்டாம் வாசகத்தில் மறைந்தும் காணப்படுகின்றது. அது எப்படியென்றால் திருச்சபைக்கு தலையாகிய இயேசு இறந்து உயிர்த்து விண்ணக தூயகத்தில் நுழையும் போது திருச்சபையானது கைம்பெண்ணாக கருதப்பட்டது. இந்த மூன்று விதமான நிகழ்வுகளிலும் அதி உயர்ந்த முழுமையான காணிக்கையின் மேன்மை விளங்குகின்றது. இறைவாக்கினரான எலியாவை போஷித்த விதவைப் பெண்தான் இனி இறந்து விடுவேன் என அறிந்தும் கடவுளின் மனிதரான எலியாவுக்காக முழுவதையும் கொடுப்பதனால் குறைவின்றிப் பெற்றுக் கொள்கின்றாள். இறைமகன் இயேசுவும் தனது தந்தையின் மீது முற்றும் முழுதான அன்பு கொண்டு தம்மைப் பலியாக ஒப்புக் கொடுக்கின்றார். (கொலோ 1:19,2:9) அதேபோலவே நற்செய்தி காட்டும் அந்தக் கைம்பெண்ணும் தன்னிடம் இருந்த இறுதி நாணயத்தையும் பெட்டியில் இட்டு கடவுளின் முன்னிலையில் பெரிய செல்வம் கொண்டவளாக மாறுகின்றார். முழுமையான காணிக்கை என்பது,

"எவ்வளவு கொடுத்தோம் என்பதல்ல
என்ன மனநிலையில் கொடுத்தோம்
என்பதுதான் மிகமுக்கியமானது"

காயினைவிட ஆபேல் நிறைவோடு கொடுத்த காணிக்கையையும், (எபி 11:4) புறப்பட்டு வா என சொன்ன போது கடவுளின் குரலுக்கு செவி கொடுத்து ஆபிரகாம் அனைத்தையும் விட்டு விட்டு சென்ற காணிக்கையையும் (தொ.நூல் 22:9-12), தாழ்மையான உள்ளமே சிறந்த காணிக்கை (லூக் 18:9-14) எனும் பகுதியையும், மனத்தாங்கல் இல்லாமல் சமாதான உணர்வோடு கொடுக்கும் காணிக்கையே சிறந்தது (மத் 5:23) எனக் கூறும் இப்பகுதியோடும், நாம் கொடுக்கும் காணிக்கைகள் எவ்வாறானவை என நாதம் எண்ணிப் பார்ப்பது சிறப்பானதொரு செயலாகும்.

"இருகரம் விரித்து கொடுப்பவர்கள்
கொடுத்தவற்றை விளம்பரப்படுத்தாமல்
கொடுத்தோம் என்கின்ற எண்ணத்தைக்
கூட தானமாக கொடுத்து விட வேண்டும்

## பொதுக்காலம் 33 ஆம் வாரம்

தானியேல் 12:1-3, எபிரேயர் 10:11-14,18 மாற்கு 13:24-32

### ஆய்ந்தறியும் அவதானம் வேண்டும்

அன்பானவர்களே வருகின்ற 34ம் ஞாயிறு தினத்தோடு சேர்த்து நாம் பொதுக்கால ஞாயிறு தினங்களை முடித்து திருவருகைக் காலத்துள் புக இருக்கின்றோம். எனவேதான் எமை நோக்கி வர இருக்கும் மீட்பின் ஆண்டவரை நீதியின் அரசரை எதிர் கொள்ள நாம் எம்மை பரிசுத்த தனத்தில் ஆயத்தப்படுத்த இறுதி நாள் நிகழ்வுகளைக் கூறி அழைக்கின்றது இந்த ஞாயிறு.

**முதல் வாசகத் திருப்பொழிவு :**

இறந்தோர் உயிர் பெறுதல் என்பதுதான் எமது கத்தோலிக்க விசுவாசத்தின் அடிநாதம். அதற்கேற்றால் போல்த்தான் இன்றைய முதல் வாசகம் நீதிமான்கள் எவ்வாறு விண்ணரசு பெறுவார் என்றும் பாவிகள் எவ்வாறு தண்டனைத் தீர்ப்பு பெறுவார் என்றும் எடுத்துரைக்கின்றது. விசுவாசிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் (ஏரேமியா 30:7, மத்தேயு 24:21) எனவும் எடுத்துரைக்கின்றது.

**இரண்டாம் வாசகத் திருப்பொழிவு :**

இயேசு ஆண்டவர் தாமே முதன்மையான தலைமைக்குரு அவரே இவ்வுலகில் முழுமையான பலியாக தன்மைத்தாமே ஒப்புக் கொடுத்து எக்காலத்திற்கும் ஈடாகும் பலியை ஒப்புக் கொடுத்தார். அவரே பலிப்பீடமாகவும், அவரே பலியிடுபவராகவும், அவரே பலிப் பொருளாகவும் இந்த உன்னத பலியினை நிறைவேற்றினார். இவ்வாறான முழுமையான பலியின் மூலம் இயேசுவோடு நாம் இணைந்து இயேசுவுக்குள் நாம் இறைவனுக்கு முழுமையான பலிப்பொருள்களாக மாற்றப்பட்டுள்ளோம். எனவே எமை எப்போதும் முழுமையாக்கும் கடவுளின் வார்த்தையானவருக்குள் வாழ எமது வாழ்க்கையை இறைவார்த்தைக்குள் கட்டிக் கொள்ள வேண்டும்.

**நற்செய்திப் பொழிவு :**

உறுதியான விசுவாசத்தினை உதறித் தள்ளி விடாமல் இருக்க அழைக்கின்றது இன்றைய நற்செய்தி வாசகம். இவ்வாசகங்களை வாசிக்கும் அனேகம் பேர்கள் "உலகு இப்படி அழியும், அப்படி அழியும் என தங்களை தாங்களே குழப்பிக் கொள்கின்ற உலக வழக்கினை நாம் காணலாம்." ஆனால் இந்த "உலகு அழிந்தாலும் என் வார்த்தைகள் அழியாது" எனக் கூறும் இயேசுவின் வாக்குறுதிகளை நாம் கவனிக்காது விட்டு விடுகின்றோம். எனவே கரையான், அரித்து, காணாமல் போய் விடும் இவ்வுலகின் செல்வங்களைக் கொண்டு அழியா வாழ்வின் செல்வத்தினை பெற வேண்டி இவ்வாசகம் அழைப்பு விடுகின்றது. அத்தோடு மட்டுமல்லாது எல்லாம் விண்ணக தந்தையின் திட்டத்தின்படி நடைபெறுகின்றது என்றும், உலகம் இன்று அழியும், நாளை அழியும் என எந்த ஒரு மனிதரும் எதிர்வு கூற முடியாது அது தந்தைக்கே சொந்தம் என இயேசு எடுத்தியம்புகின்றார்.

**மறையுரைப் பொழிவு :**

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா" எனத் தொடங்கும் ஒரு பாடல் உள்ளதனை நாம் அறிவோம். ஆனால் இக்காலத்தில் இந்தப் பாடல் கூட பொருளற்றதாகி விட்டது எனது அருமைச் சகோதரங்களே! சுனாமி நேரத்தில் நடந்து முடிந்ததும், அண்மையில் வன்னிக் காட்டில் மரணித்து மண்ணோடு மண்ணாய்ப் போன, மறைக்கப்பட்ட உயிர்களின் எண்ணிக்கையினை நினைக்கும் போது இதுவும் பொய்யாகின்றது. உண்மையிலேயே எமது ஆலய சேமக் காலைகளில் புதைக்க இடமில்லை குழி வெட்டும் போது எலும்புக்கூடாக வருகின்றது. எனவே அதுகூட ஏற்கனவே ஒருவரைப் புதைத்த இடம். அறிஞர்களின் கருத்தின்படி பணம் படைத்த மனிதன் நிலத்தை வாங்கி அது தனது உடமை என்கின்றான் ஆனால் அது வல்ல உண்மை, நிலம்தான் இறுதியில் மனிதனை வாங்கிக் கொள்கின்றது. அழகான உடையுடுத்தி, பட்டணிந்து, பகட்டாக நகைகள் அலங்காரங்கள் செய்து, மேக்கப் (Make up) பண்ணி, புண்ணியம் சேர்க்க இறைவன் கொடுக்கின்ற செல்வத்தினை விரையமாக்குகின்றோம்.

நாம் ஒன்றினை அறிந்து கொள்ள வேண்டும் இந்த வாழ்க்கை மிகவும் குறுகியது. இந்த குறுகிய வாழ்வினைக் கொண்டு நிலையான விண்ணக செல்வத்தினை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இறைவன் கொடுக்கும் உயிர் மூச்சை பெற்றுக் கொண்டு உயிர் வாழ ஆரம்பிக்கும் நாம் அவர் தமது உயிர் மூச்சை மீண்டும் பெற்றுக்கொள்ளும் பொழுது ஆவி துறந்து இவ்வுலக வாழ்வினை முடித்துக் கொள்கின்றோம். எவ்வளவுதான் அறிவுரைகள், மறையுரைகள், வாழ்க்கை யதார்த்தப் பாடங்களை அறிந்தாலும், மனிதன் ஆசையை துறப்பதில்லை.

தான் காணும் அனைத்தும் நிலையானவை என நினைத்து கொள்கின்றான். சொத்துள்ளவன், பரோபகாரி, பணக்காரன், ஐயா, ஜனாதிபதி, அமைச்சர், உலகை ஆள்பவர் என்று இந்த உலக பட்டங்கள் எல்லாம் நிலையற்றவை "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கு திரும்புவாய்" என்னும் வாழ்வின் உண்மைச் சூத்திரமே நிலையானது. என்னதான் பட்டங்களை பெயருக்கு பின் அடுக்கிக் கொண்டாலும் இழந்த பின் கிடைக்கும் "பிணம்" என்னும் பட்டம் நிலையானது. இதை அறிந்தாவது வீணாக விரையமாகிக் கொண்டு இருக்கும் இவ் உலக வாழ்வைக் கொண்டு விண்ணக வாழ்விற்குரிய புண்ணியங்களை சம்பாதிப்பதே சிறப்பான காரியமாகும்.

அவ்வாறு செய்தால்தான் "நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியர்களே, உனது தந்தையின் இல்லத்து மகிழ்வில் பங்கு கொள்ளுங்கள் எனும் குரலினை இறுதித் தீர்ப்பின் போது செவிமடுக்கலாம்"

மரத்தில் இலை இருக்கும் வரையில்தான் – அது
மரத்திற்கு உறவு
மண்ணில் வேர் இருக்கும் வரையில்தான் – மரம்
மண்ணுக்கு உறவு.
மலரில் மணம் இருக்கும் வரையில்தான்
வண்டு மலருக்கு உறவு.
காம்பில் காய் உள்ள வரையில்தான்
அது காம்புக்கு உறவு.
மண்ணில் உன் கால் இருக்கும் வரையில் தான்
நீ இந்த உலகுக்கு உறவு – இறுதியில்
நீ இந்த உலகிற்குள் உறங்கு –
இதுதான் மானிட வாழ்க்கை.

## சிரிப்பு வந்தால் இங்கு சிரியுங்கள்!



"நான் காப்பி குடிக்கிற பழக்கத்தை விட்டுடலாம்னு பார்க்கிறேன். எந்த வீட்டுக்குப் போனாலும் கட்டாயப்படுத்திக் காப்பி கொடுத்துடறா. வேண்டாம்னா கேட்க மாட்டேங்கறா!"

"அடியே! ஒரு கப் காப்பி போடு."



"இன்னிக்குப் பரீட்சையில என்னென்ன கேள்விகள் வரும்... அதைச் சொல்லுங்கோ..."

"தம்பி! இந்தக் கேள்வியைத் தவிர வேறு எது வேணுமானாலும் கேளு!"

## உறவுகளிடமிருந்து

### P.R.I. ந.பு.நி. முதல் நன்மை கொண்டாட்டம்

கடந்த 11.10.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று எமது நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள புனித வேளாங்கன்னி ஆலயத்தில் இடம் பெயர்ந்து தற்காலிகமாக வாழ்ந்த நிலையிலும் இங்குள்ள சிறார்களுக்கு திவ்விய நற்கருணை எனும் திருவருட்சாதனம் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரான அருட்தந்தை ஜோர்ஜ் அடிகளாரால் வழங்கப்பட்டது. இங்குள்ள மறையாசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் தகுந்த முறையில் சிறார்களுக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. அன்றைய நாளில் மறையுரையில் ஒவ்வொரு குழந்தையும் நல் கிறிஸ்தவ பிள்ளையாக வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். இன்றைய நாள் இச் சிறார்களுக்கு மகிழ்ச்சிகரமான நாள். எனவே இச்சிறார்கள் திவ்விய நற்கருணையை தகுந்த ஆயத்தத்தோடு பெற வேண்டும் என கூறினார்.

றோ. மேரி தர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் கியூடெக்

யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்

Tel.ph: 021-2222571, 7314 Fax: 021-2228050 Email: hudec@sltnet.lk Website: ww.hudecjaffna.org

HUDEC Caritas

## மகளீர் குழுக்களின் செயற்பாடுகள்



தெல்லிப்பளை மகளீர் குழுக்களினால் மல்லாகம் சந்தை கட்டடத்தொகுதியில் 19.10.2009 விற்பனை நிலையம் இயக்குனர் அருட்பணி.கி.யோ.ஜெயக்குமார் அடிகளாரால் திறந்து வைத்ததுடன், முதல் வியாபாரத்தை இயக்குனர் ஆரம்பித்து வைத்தார். இதில் குளமங்கால் பங்குத்தந்தை அருட்பணி.நிருபன் அடிகளார்,கிராமசேவகர்,மல்லாகம் இலங்கை வங்கி முகாமை யாளர், மற்றும் கியூடெக் பணியாளர்கள் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.



கியூடெக் கரித்தாஸ் இளவாலைப் பிராந்திய மகளீர் குழுக்கள் குழுப்பரிமாற்ற சந்திப்புக்காக 16.10.2009 பருத்தித்துறை, புனிதநகர், சுப்பர்மடம், ஆகிய கிராமக்குழுக்களைச் சந்தித்து கலந்துரையாடி மரநடுகை செய்து உறவைப் பலப்படுத்திக் கொண்டதைக் காண்கிறீர்கள்.



கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் மகளீர் குழுக்களினால் மனித உரிமை விழிப்பூட்டல் கருத்தமர்வு சுப்பர் மடத்தில் நடாத்தப்பட்டது. இதில் மகளீர் குழு அங்கத்தவர்கள் பங்கு பற்றி பயன் அடைந்ததைக் காணலாம்.

## புனர்வாழ்வு புனரமைப்பு பணிகள்



கரித்தாஸ் வெளி நாட்டுப் பிரதி நிதிகள் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப்பணிகளை எமது நிறுவன உறுப்பினர்களுடன் நேரில் பார்வையிடும்போது

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ் இடைத்தங்கல் முகாம்களில் தங்கிவாழும் மக்களுக்கு மாசி மாதம் தொடக்கம் இன்றுவரை 34,052.439.00 ரூபா மதிய உணவுக்காக கரித்தாஸ் - கியூடெக் நிறவனத்தால் செலவழிக்கப்பட்டது.

வன்னியை சொந்த இடமாகக்கொண்டு யாழ் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரியில் தங்கி கல்விகற்கும் 298 மாணவர்களுக்கு 2008 மார்கழி மாதம் தொடக்கம் இன்றுவரை மதிய உணவுக்காக நாளாந்தம் 310000.00 ரூபா வழங்கப்பட்டது.

வன்னியிலிருந்து மீள்குடியமர்ந்த மண்டைதீவு, புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 360 குடும்பங்களுக்கு பால்மாவும், சத்துணவும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியிருப்புக்கள்



| இல | இடம் | வகை | வீடுகள் |
|---|---|---|---|
| 1 | நவாலி குருநகர் | அரைநிரந்தரம் | 3 |
| 2 | ஊரெழு 1 (வழங்கப்பட்டுள்ளது) | அரைநிரந்தரம் | 17 |
| 3 | தும்பளை | தற்காலிகம் | 10 |

## மருத்துவ உதவி

| இல | வகை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண் சத்திர சிகிச்சைக்கான லென்ஸ் (Lence) | 03 |
| 2 | பார்வைக் கண்ணாடி | 01 |

## பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள்,கொப்பிகள்,புத்தகப்பை விநியோகம்

| இல | பாடசாலை | மாணவர் எண் |
|---|---|---|
| 1 | யா/ வல்வெட்டித்துறை அ.த.க.பாடசாலை | 65 |
| 2 | நலன்புரி நிலைய மாணவர்கள் | 06 |
| 3 | யா/ வேலணை மத்திய கல்லூரி | 45 |
| 4 | யா/ வல்வெட்டித்துறை றோ.க.த.க | 46 |
| 5 | யா/ சில்லாலை றோ.க.த.க. | 13 |

## வாழ்வாதார திட்டத்தினரின் செயற்பாடுகள்

கியூடெக் - கரித்தாஸ் வாழ்வாதார திட்டத்தினரால் 50 தொண்டர்கள், குழுத்தலைவர்களுக்கான தலைமைத்துவ மூன்று நாள் வதிவிடப்பயிற்சி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு சான்றிதழ் பெறுபவர்கள் இயக்குனருடன் கூடிநிற்கும் காட்சி...



"துண்டுபட்ட தனிமனிதனஅல்ல ஒன்றுபட்டு மனிதகுலம் முன்னேற வேண்டும்" (பாப்பறை மேச்சின்னப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத் திறனாய்வு

சிறிய இடைவெளியின் பின்பு திரைப்படத் திறனாய்வில் மீண்டும் சந்திக்கிறோம். இவ்வருட ஆரம் பத்தில் இருந்து சில திரைப்படங் களையும், குறும் படங்களையும் திறனாய்வு செய்து வாசகர்களின் அவதானத்திற்கு கொணர்ந்திருந் தோம். இது சில வாதப் பிரதி வாதங்களை வாசகர்கள் மத்தியில் எழுப்பியிருந்தது. ''பாதுகாவலனி லும் பட விமர்சனமா?" ஒன்று சிலர் வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தார்கள். இவர்களில் பலர் பாது காவலனில் வந்த படங்களின் தலைப்பை மட்டும் பார்த்தனரே தவிர, திறனாய்வின் உள்ளடக்கத் தைப் படிக்கவில்லை என்பது பின்னர் தெரிய வந்தது. அதே வேளை பெரும்பாலான வாசகர்கள் திறனாய்வுகளை ஆழமாகப் படித்து, காலத்தின் தேவை கருதிச் செய்யப் படும் ஆக்க பூர்வமான செயல் என்று பாராட்டியும் இருந்தனர்.

பாதுகாவலனில் திரைப்படத் திறனாய்வு வெளிவர வேண்டுமா என்று பலரையும் சந்தித்து ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொண்டதன் காரணமாகவே கடந்த சில வாரங் களாக திரைப்படத் திறனாய்வு வெளிவரவில்லை. பலருடன் மேற் கொண்ட உரையாடல்கள் மூல மாக திரைப்படத் திறனாய்வு ஓர் அவசியமான விடயம் என்பதைப் புரியக் கூடியதாயிருந்தது. ''பாது காவலனில் கிறிஸ்தவத் திரைப் படங்கள் பற்றி மட்டும் எழுதுங்கள். ஏனைய சினிமாக்கள் பற்றி எழுத வேண்டாம்" என்று சிலர் கூறுகின்ற னர். புற்றீசல்கள் போல் நாளாந்தம் வெளிவரும் தென்னிந்திய சினி மாக்கள்தாம் எம்மக்களின் சம கால சமய, சமூக வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே இப்படங்களைத் திறனாய்வு செய்து இவற்றில் அடங்கியுள்ள ஆபத் துக்கள், அல்லது ஆக்கபூர்வமான விடயங்கள் பற்றித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையை அவசியமான தாக பலரும் கருதுகின்றனர். ஏனெனில் பாதுகாவலன் வெறுமனே ஒரு சமயச் சஞ்சிகை மட்டுமல்ல; அது ஓர் ஆரோக்கியமான கிறிஸ் தவ சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பையும் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு திரைப் படத் திறனாய்வுகளை சமூகத் தொடர்பு ஆணையம் தொடந்து வெளியிடவுள்ளது.

### இவ்வாரத் திறனாய்வில் "உன்னைப் போல் ஒருவன்"

தான் வாழ்ந்து கொண்டிருக் கும் சமூகத்தின் மீதான ஆழ்ந்த பொறுப்புணர்வையும், அதிகார வர்க் கங்களின் பொறுப்பற்ற செயற்பாடுக ளுக்கெதிரான நியாயமான கோபத் தையும் வெளிப்படுத்தும் ஒரு பொது மனிதனின் ஒரு எதிர்ச் செயற் பாட்டை மையமாகக் கொண்டதே ''உன்னைப் போல் ஒருவன்"

சமகால இந்திய வாழ்வில் தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல் கள் சாதாரணமானவை. இவற்றால் ஏற்படும் பொது மக்கள் இழப்புக் களும் ஏராளமானவை. ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்களின் அரசியல் மற்றும் பண ஆசைகளி னால் தாக்குதல் செய்பவர்கள் தப்பித்து விடுவதும் அதிகம். இந் நிலையில் தனது சமூகப் பொறுப்பு ணர்வை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தி குற்றவாளிகளை அழிக்கும் வித்தியாசமான ஒரு நப ரின் செயற்பாடே கதையின் களமாக அமைகிறது.

சென்னை காவல்துறை மேலதி காரிக்கு (மோகன்லால்) ஒரு தொலை பேசி அழைப்பு வருகிறது. பேசிய மற்ற நபர் (கமல்ஹாசன்) தான் சென்னையில் ஆறு இடங்களில் சக்தி வாய்ந்த குண்டுகளை பொருத் தியிருப்பதாகவும், சிறையில் உள்ள நான்கு தீவிரவாதிகளை விடுவிக்கா விட்டால் அன்று மாலை ஆறு மணிக்கு அக்குண்டுகள் வெடிக்கும் என்றும் மிரட்டுகிறான். நவீன தொழில் நுட்ப பரிவர்த்தனைச் செயற்பாடு களை நன்கு வெளிப்படுத்தி, விறு விறுப்பாகவும், தோட்டா தரணியின் கலை நயத்துடனும் வளர்ந்து செல்கின்றது படம். இறுதியில் அந்த நான்கு தீவிரவாதிகளும் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பித்து விடக் கூடாது என்பதற்காக அவர் களை ஒன்றாக வெளியே கொணர்ந்து அழிப்பதற்காக அந்த மர்ம மனிதன் போட்ட திட்டமே இக்குண்டு மிரட் டல் என்று தெரிய வருகிறது. தனது திட்டதில் வெற்றியடைந்த அம் மனிதன் தனது தடயங்களையெல் லாம் அழித்து மீண்டும் தனது சாதாரண சமூக வாழ்வுக்குள் நுழை கிறான். குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கலாம். ஆனால் சிந்தப்பட்ட சாதாரணர்களின் குருதியும், கண்ணீரும் குற்ற வாளிகளை பழிவாங்கியே தீரும் என்ற கருத்துடன் படம் நிறைவு றுகிறது.

கிளுகிளுப்பும், அங்க அசைவு களும் நிறைந்த ஆடிப்பாடும் காட்சிகள் இல்லை. தனிநபர் சாகசங் கள் நிறைந்த சண்டைக் காட்சிகள் இல்லை. அசட்டுத்தனமான நகைச் சுவைக் காட்சிகளும் இல்லை.

பொறுப்பு நிறைந்த காவல் துறை அதிகாரியாக நடிக்கும் மோகன் லால், மர்ம மனிதனாக ஒரே காட் சிப் பின்னணியிலேயே அதிக நேரம் தோன்றி தொலைபேசி மிரட்டலிலேயே அதிக நேரம் குரல் கொடுக்கும் கமல்ஹாசன் ஆகிய இருவருமே இப்படத்தின் தூண்கள். மிகச் சிறப் பான, கலைப்பண்புமிக்க நடிப்பை

(8ம் பக்கம் பார்க்க...)

# அடிமை வாழ்விலிருந்து விடுதலை தரவல்லவர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே!

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

மனிதம் வாழ வேண்டும், அதுவும் முழுமையாக வாழ வேண் டும் குறைவில்லாமல் வாழவேண் டும், மதிப்போடு வாழ வேண்டும், மாண்போடு வாழ வேண்டும். இதன் மூலம் இவ்வுலகிலே புனிதம் பிரதிபலிக்க வேண்டும் என்பதுதான் மனிதனைப் படைத்த இறைவனின் நோக்கமாகும். ஆனால் மனிதம் இன்று சிதைக்கப்படுகிறது, சீரழிக் கப்படுகிறது, முழுமனிதர்களாக வாழ்வதற்கு எடுக்கப்படும் முயற்சி களெல்லாம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன. இன்றைய சூழ லில் மனிதன் மனிதனை இனத் தால், வர்க்கத்தால், சாதியால், சம யத்தால், தொழிலால், பாலியலால் பிரித்துப் பார்க்கிறான். கொடிய யுத் தக் கருவிகளைக் கொண்டு சிதைக்க முனையும் போது அதனால் தானும் சிதைந்து போகிறான். இந்த அவல நிலையில் இருந்து மனிதனை மீட்டு அவனுக்கு உண்மை விடுத லையைக் கொடுத்து அவனுக்கு வாழ்வளிக்கக் கூடியவர் யார்?

பல்வேறுபட்ட கேள்விக் கணை களோடும், சிந்தனைகளோடும், வாழ் வில் நாளும் துன்பங்களை சுமந்து போராட்டத்தின் உச்சியில் பயணிக் கும் எமக்கு உண்மை விடுதலையை தர வல்லவர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே! திருவிவிலி யம் ஒரு விடுதலை நூல் என்று கூறினால் மிகையாகாது. காலத் துக்கு காலம் மனிதனின் வாழ்வில் விடுதலை நாயகனாக விளங்கிய இறைவனின் அற்புதச் செயல்களை எமக்கு படம் பிடித்து காட்டி நிற் கிறது விவிலியம். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் பாரவோன் அரச னால் கொடுமைப்படுத்தப்பட்ட பொழுது, அவர்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுவிக்க இறங்கி வந்தார். "*என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்....*" (வி.ப3:7-8) இங்கு யாவே அவர்களுக்காக போராடும் இறைவனாக காட்சியளிக்கிறார். அடிமைத்தனங்கள், பாலைவனத் தில் அவர்கள் சந்தித்த இன்னல் கள், கடவுளுக்கு பிரமாணிக்கமற்ற நிலையில் வாழ்ந்த சந்தர்ப்பங்கள், அதற்கு பெற்ற தண்டனைகள் இவ் வாறு வாழ்வில் ஒரு முழுமையற்று, சொந்த நாடற்று, இருக்க இல்லிட மின்றி, வழிபட ஆலயமின்றி நாடோ டிகளாக அலைந்த அந்த மக்க ளுக்கு அன்று கடவுள் கொடுத்த விடுதலை, ஒரு பொருளாதார, சமூக, அரசியல், சமய அடிப்படையிலான முழுவிடுதலையாகும்.

விடுதலை நாயகன் இயேசு வின் காலத்திலும் மக்கள் அடிமை களாகவே வாழ்ந்தனர். பணித் தொடக்கத்திலேயே அவருடைய இலட்சியத்தை வெளியிட்ட அவர் (லூக் 4: 18-19, ஏசா 61: 1-2) மக்கள் மீது அக்கறை கொண்டவராய், அக்கால சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை நன்கு அறிந்து மக்களின் துன்பத்திற்கு காரண மான அநீத அமைப்புக்களை வன்மை யாகக் கண்டித்தார். தெளிவான சிந் தனையும், கூர்மையான தொலை நோக்கும், பரந்த ஞானமும், நேர் மையும், சுதந்திரமும், உள்ளவராக புதியதொரு சமுதாயத்தைப் படைக்க தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். அன்று நிலவிய சமூக அரசியல் ஆதிக்கச் சக்திக ளையும், சட்டம், சமூக சமய பழக் கங்களைப்பற்றியும் துணிச்சலாக விமர்சித்தார். அன்று நிலவிய அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, மனித மாண்பு, மனித நேயம், மனித சுதந்திரம், நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இறையரசு மதிப்பீடுகளுக்காக தன்னை வரலாற்று நிகழ்ச்சிகளோடு கரைத்துக் கொண்டார்.

இன்று எமது நாட்டில் உள்ள சமூக பொருளாதார அரசியல் சூழ் நிலைகளில் மக்களின் நிலைய றிந்து செயற்பட திருச்சபையில் எல்லாநிலையிலும் உள்ளவர்கள் அவரவர் பணிக்கென அழைக்கப் படுகிறோம். போரின் வடுக்களை யும் அதன் வலிகளையும் தங்கள் வாழ்விலே சுமந்தவர்களாக, நாளாந்த நிகழ்வுகளிலும் அதன் நிழலையே அனுபவிப்பவர்களாக விருக்கும் எம் மக்கள், தங்கள் வாழ்வில் அனைத்தையும் இழந்து அடிமைகளாக, வாழ்வில் ஒடுங்கிப் போய் தங்களை இந்த நிலையில் இருந்து விடுவிக்க யார் வருவா ரென கதறுகின்ற போது எங்களின் பதில் என்ன? எத்தனை கொடிய அவலங்கள் வந்தாலும் அவற்றில் இருந்து எம்மைக் காத்து, அடிமைத் தன வாழ்வில் இருந்து எம் எல் லோருக்கும் முழுமையான விடுத லையை தர வல்லவர் நம் ஆண்ட வர் இயேசுக் கிறிஸ்துவே. இதனை நாம் எமது விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தி அதே விசுவாச சத்தியத்தை எமது மக்களுக்கும் கொடுக்க வேண்டும். "நீதிக்காக உழைப்பதும், உலகை மாற்றி அமைப்பதில் திருச்சபை ஈடுபடுவ தும் நற்செய்தி அறிவிப்பின் இன் றியமையாத உடற்கூறாக இருப்பதை நாங்கள் உணருகின்றோம்" என்ற திருத்தந்தை 6ம் பத்திநாதரின் செய்தியை முன்னுதாரணப்படுத்தி, எமது செயலால் எமது விசுவாச வாழ்விற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத் திலே வேரூன்றி கிறிஸ்துவை எம் வாழ்வில் ஆதாயமாக்கிக் கொள்ள, கிறிஸ்து அரசரின் வெண் தூய கொடியின் கீழ் அணி அணியாக நின்று அவரது அரசு இவ்வுலகில் மலர குரலெழுப்பி செபிக்க ஒன்று படுவோம். ஏனெனில் அடிமை வாழ்விலிருந்து விடுதலை தரவல் லவர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே!


## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

அழகரட்ணம் அழகேஸ்வரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.10.1960 | 30.09.2009 |

"இறைவா உன்மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப்படுவதில்லை"

ஆயிரம் உறவிருந்தாலும்
மாமா என்றழைக்க உறவில்லை
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் நிறை குடமாய்
பரிவுடனே அன்பு காட்டி
பாரினிலே வாழ வைத்த
குடும்பக் கோயிலின் தீபமே

எங்கள் வாழ்வின் விடி வெள்ளியே
சிரித்து மழலை பேசி
சிரிப்புடனே எங்கே சென்றீர் மாமா
மண்ணுலக வாழ்வு போதுமென்றோ
விண்ணுலகம் நோக்கி விரைந்து
சென்று விட்டீர்கள்

என்றும் உம் அன்பிற்காய் ஏங்கிடும்
மருமகன்
எ. நிலோஜன்

Advt-66/09



## கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில்

**பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்கள் பற்றிய விபரங்கள்**

★ பல நிறங்களில் அனைத்து விதமான செபமாலைகளும்,
★ திருவிவிலியம் (புதிய ஏற்பாடு)
★ திருவிவிலிய கவர், திருவிவிலியம் ஆங்கிலத்தில்,
★ மோட்சபாதை, பூசைப்புத்தகம்
★ அனைத்து நவநாள் புத்தகங்களும்
★ அருட்சாதனங்களைப் பெறுவதற்கான ஆயத்த புத்தங்களும்,
★ நற்கருணைப் பாத்திரங்கள், வைன் பாத்திரங்கள், துருவில், பன்னீர்ச்
★ செம்பு, வைன் தண்ணீர்ப்பாத்திரம்.
★ (திருப்பலியில் பயன்படுத்தக்கூடிய அனைத்துப் பொருட்களும்)
★ கீரெக், செயின், வரவணிக்கம்
★ சிறிய பெரிய அளவிலான படங்களும், பிரேம் செய்த படங்களும்
★ மற்றும் 31ம் நாள் மடல, குருப்பட்ட ஞாபகமடல், திருமண அழைப்பிதழ் மடல், வாழ்த்து மடல்கள் - கிறிஸ்மஸ் மடல்களும்
★ ஒலி நாடாக்கள், இறுவெட்டுக்கள்
★ வைன், நெல்லி இரசங்களும்
★ பாடசாலை உபகரணப் பொருட்கள்
★ புனிதர்களின் உருவச் சிலைகள்

**போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

★ மேலும் போட்டோப் பிரதிகளும்,
★ தொலைபேசி இணைப்புக்கள் (உள்ளூர் அழைப்பு) பெற்றுக் கொள்ளலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



11.11.2008

அமரர்

திரேஸ் லூயிசா சூசைப்பிள்ளை

" நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"

ஓடி உருண்டதக்கா உமைப் பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உம் பிரிவை எண்ணி நிதம்
அழியாத அன்பின் நினைவுகளோ
மனதோடு தொடரும் எம்மை
உம் ஆத்மா சாந்தி பெற
கருணைக் கடவுளை நாம் நிதமும் வேண்டுகின்றோம்

இவரின் ஆன்ம சாந்திக்காக 11.11.2009 புதன் கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆசனக் கோவிலிலும் அருள் ஆச்சிரமத்திலும் துக்கப்பாடல் பூஜை ஒப்புக்கொடுக்கப்படும்.

இல. 9, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-72/09

இவரின் பிரிவால் துயருறும்
மகன், மருமகள் சகோதரர்கள்,
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்.



## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின் றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத் திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். ஆமென்.

"ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"

ஓர் அடியாள்
குளமங்கால்.

Advt-75/09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைபடத்திறனாய்வு 7ம் பக்கத் தொடர்ச்சி

வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்ச் சினிமாவுக்கேயுரித்தான ஆடல், பாடல், காதல், சாகசங்கள் போன்ற மரபுகளுக்கு அப்பால் சென்று, வித்தியாசமான படங்களை உருவாக்குவதையே நோக்கமாக கொண்டுள்ள கமல்ஹாசன் ஏற்படுத்தியுள்ள அடுத்த மைல் கல் இது எனலாம். கமலின் வித்தியாசமான ''ஆள வந்தான்'', ''ஹேராம்'' ''வசூல் ராஜா'' படங்களின் வரிசையில் ''உன்னைப் போல் ஒருவனும்'' இணைகிறது.

கமலின் மகளான ஸ்ருத்தி ஹாசன் இசையமைக்க, சக்றி தொலத்தி இயக்க 106 நிமிடங்களே நீண்டு செல்லும் இப்படத்தில் திகிலும், விறுவிறுப்பும் நவீன தொழில் நுட்பத்தின் தாராளமான பயன்பாடுகளும் அதிகம் உண்டு. வித்தியாசமான முறையில் உருவாக்கப்பட்ட வித்தியாசமான ஒருவன்.

சமீபத்தில் வெளிவந்த ''கந்த சாமி'' ''ஆதவன்'' போன்ற தென்னிந்த மசாலாப் படங்களுடன் ஒப்பிட்டால், ''உன்னைப் போல் ஒருவன்'' எல்லாருக்கும் உரிய ஒரு படமாக, சமூகப் பொறுப்புடன் உருவாக்கப்பட்ட படமாக கொள்ளப்படலாம். ஆனால் வருந்தத்தக்க உண்மை என்னவெனில், உன்னைப் போல் ஒருவனில் கிளு கிளுப்புக்கள் இல்லையென்று கூறி, பல ரசிகர்கள் ஆதவன் கந்தசாமிகளை நோக்கியே படையெடுக்கிறார்கள். பொறுப்புணர்வுள்ள ரசிகர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

## குருக்கள் மக்களுக்கு உண்மையை அறிவிக்க வேண்டும்

### - திருத்தந்தை -

வாய்மையே வெல்லும், உண்மை நிலையானது, உண்மையின் உறைவிடம் இறைவன், இதை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் பணிசெய்ய வேண்டியவர்கள் தான் குருவானவர்கள் என்று திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் கூறியுள்ளார். புனித வியானியின் காலத்தில் மக்கள் உண்மை இறைவனைத் தேடியிருந்தனர். இன்றும் அதேபோல் இறைவனைத் தேடுகின்றனர். இறைவனை தேடி கண்டடைவது தான் உண்மையான நிறைவை அளிக்கும். இறைவனோடு நல்லறவு கொண்டு இறையன்பில் வளரும் குருக்கலால் தான் புனித வியானியைப் போல் மக்கள் உள்ளங்களில் இடம் பிடிக்க இயலும் என்றும் திருத்தந்தை கூறினார்.


## 21ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 . 02 . 1912



இறப்பு 05 . 11 . 1988

அமரர்

### பேதுறுப்பிள்ளை ஜேம்ஸ் அமிர்தநாயகம்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ 11/25)

அன்புத் தெய்வமே இறைவா. ஆத்துமாக்களை அதிகமாய் நேசிக்கிறவரே. உமது அளவற்ற இரக்கத்தால் உம் அடியாருக்கு பேரின்ப வாழ்வின் மங்காத ஒளியையும். இவரின் பாவங்களைப் பொறுத்து நித்திய சாந்தியையும் அளித்தருளும் ஆமென்.

என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்.

இல, 128, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-77/09



## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சாமிநாதர் யேசுதாசன்

" இன்றே நீ என்னோடு
வான் வீட்டில் இருப்பாய்"

மலர்வு : 23.03.1932
உதிர்வு : 02.11.1999

இவரது ஆன்மா இறைவனின் நித்திய பேரின்ப ஒளியில் வாழ்ந்திட இறைவனை வேண்டுவோம்.

என்றும் நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
சகோதரி.

இல 41, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-76/09


## கோவா திருயாத்திரை (3ம் பக்கத் தொடர்ச்சி)



சன்கோல் என்ற கிராமத்தில் உள்ளது. அதையும் தரிசித்துச் செபித்தோம். வண. அடிகளார் அயல் கோர்டர்லிம் ஆலயத்திற்கு நற்கருணை நாதரைச் சந்திக்கச் செல்லும் பொழுது இரவாயிருந்தாலும் ஆலயக் கதவுகள் அற்புதமாக திறக்கப்பட்டன என வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

முத்திப்பேறு பெற்ற அதி வண. யோசேப்பு வாஸ் அடிகளாருக்கு சன்கோல் ஊரில் புதிய பாரிய யாத்திரை திருத்தலம் ஒன்றும் அதன் தரைமாடியில் கண்காட்சி நினைவுச் சின்னங்களும் சமய பொருட்களின் விற்பனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாலயத்தின் பரிபாலகரான அருட்திரு றெபெல்லா எம்மை இருநாட்கள் நன்றாகப் பராமரித்தும், புனித இடங்களுக்கும் அழைத்துச் சென்றார்.

பழைய கோவாவுக்குச் சென்று முத்.அதி. வண. யோசேப்புவாஸ் அடிகளார் பணியாற்றிய ஆரோட்டரி (Oratorian) சபையின் தலைமையகத்தையும் தரிசித்தோம். இத் தலைமையகத்திலிருந்து 150 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிகையிலேயே இலங்கைக்கும் குருக்களை அனுப்பி வைத்தனர்.

1676ம் ஆண்டு குருப்பட்டத்தின் பின் 1677ம் ஆண்டு அவர் ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் மரியாயின் அடிமை" என்னும் சாசனத்தை எழுதிக்கொடுத்த ஆலயத்தையும் சந்தித்தோம். ஆவணிமாதம் 5ம் திகதி பனிமய மாதா திருநாளில் (சில்லாலை மக்களின் முன்நாள் சின்னமடு திருயாத்திரைதினம் என்பதும் குறிப்பிடத்தக்கது) இக்கடிதம் ஒப்படைக்கப்பட்ட ஆலயத்தின் முகப்புறம் மட்டுமே இன்று காட்சியளிக்கின்றது.

1542ல் இந்தியா சென்று அங்கிருந்து பல நாடுகளைத் தரிசித்து மரித்த புனித பிரான்சிஸ் சவேரியாரின் அழியாத உடல் பேணப்படும் ஆலயத்தையும் தரிசித்து குருக்களுக்காகவும் மக்களுக்காகவும் நாட்டிற்காகவும் செபித்தோம். ஆசியாவிலே மிகவும் பிரமாண்டமான பேராலயம் அருகில் உள்ளது. அங்குள்ள அற்புத மரச் சிலுவை முன்பாக முத். அதி வண. யோசேப்பு வாஸ் செபித்து வந்தார்.

ஐப்பசி மாதம் 5ம் திகதி புறப்பட்டு 6ம் திகதி மங்களூரில் சென்று முடிப்பு என்னும் ஊரில் உள்ள முத். அதி வண. யோசேப்பு வாஸ் அடிகளாரின் பாரிய நினைவாலயம் சென்று பலி செலுத்தி, அடிகளார் இலங்கைக்கு வருமுன் அங்கு ஆற்றிய பணிவாழ்வைப் பற்றித் தியானித்துப் பலிசெலுத்தினோம். அற்புத நீர் ஊற்று அங்குள்ளது குறிப்பிடத்தக்கது.

1658ம் ஆண்டு ஒல்லாந்தர் இலங்கையிலிருந்த கடைசிக் கோட்டையை போர்த்துக் கேயரிடமிருந்து கைப்பற்றியதும், 50 க்கு மேலான சகல கத்தோலிக்க குருக்களையும் நாடு கடத்தினர். கத்தோலிக்க ஆலயங்களை மூடினர். அல்லது அழித்தனர் அல்லது தமதாக்கினர். எழுபதாயிரத்துக்கு அதிகமான கத்தோலிக்கர், சொரூபங்கள், படங்கள், வேதபுத்தகங்கள் இல்லாமலும் திருப்பலியின்றியும், திருவருட்சாதனங்களைப் பெற முடியாமலும், சமயத்திற்காக உயிர் கொடுக்க வேண்டியும் 30 வருடங்கள் ஆயனில்லா ஆடுகள் போலாயினர். 1687ம் ஆண்டு கப்பலில் ஏறி மன்னார் வழியாக யோண் என்னும் சீடனும் யாழ்ப்பாணம் சேர்ந்தார் முத்.அதி வண. யோசேப்பு வாஸ் அடிகளார்.

கத்தோலிக்க குருக்கள் தடை செய்யப்பட்டிருந்ததால், பற்பல மாறு வேடங்களில் (குருத்துவ சீருடை அணியாமல்) ஊர் ஊராகச் சென்று சமயப் பணிகளை ஆரம்பித்தார். குருநகர், சில்லாலை, மன்னார், நானாட்டான், மடு, அரிப்பு, முள்ளிக்குளம், வன்னி, பூனேரி, மாதோட்டம், புத்தளம், கற்பிட்டி, கற்பிட்டி, கல்கமுவ, திரிகோணமலை, மட்டக்களப்பு, கொட்டியார், அலம்பில், புங்குடுதீவு, கண்டி ஆகிய நகரங்களில் பணியாற்றியதைப் பலர் இன்றும் கூறுகின்றனர். 1696ம் ஆண்டு கண்டியரசனால் சிறைப் படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட பின் பல சக குருக்களை வரவழைத்தார். 10 வருடங்கள் தனியாகவும், 15 வருடங்கள் தமது சபைக் குருக்களுடனும் பணியாற்றினார். இவர்களுள் அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வஸ் சிறப்பாக இலக்கியத் துறையில் சிங்களத்திலும் தமிழிலும் சமய வளர்ச்சி கண்டார். வியாகுல பிரசங்கம் (உடக்கு பாஸ்), செபங்கள் வாசாப்பு, ஒப்பாரி, புலம்பல் பாடல்கள் போன்றவற்றைத் தோன்றுவித்தார் (1705) அண்ணாவி, மூப்பர்மார் தெரிவு செய்யப்பட்டு பொதுநிலையினரிடம் விசுவாசம் பாதுகாக்க பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. முத். வண. யோசேப்புவாஸ் அடிகளார் 1711ம் ஆண்டு கண்டியில் மரித்தார். அவரின் கல்லறை இன்னும் நிருபிக்கப்படவில்லை. பல வருடங்களின் பின் 1995ம் ஆண்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் புடை சூழ, பாப்பரசர் 2ம் யோண் போல், இலங்கையின் தலைநகராகிய கொழும்பு ''காலி'' முகத்திடலில் இவருக்கு முத்திபேறு பெற்ற பட்டம் சூட்டி பீடமேற்றினார்.

ஐப்பசிமாதம் 7ம் திகதி சென்னையில் உள்ள புனித தோமையார் மலைக்குச் சென்று, அவர் இந்தியாவில் வாழ்ந்த மலைப் பிரதேசத்தையும், கொல்லப்பட்ட குன்றையும் தரிசித்து, எமக்கு கத்தோலிக்க திருச்சபையில் விசுவாசத்தை ஊன்றிய அனைத்துக் குருக்களுக்காகவும் செபித்தோம்.

முத் அதி வண. யோசேப்புவாஸ் அடிகளாருக்குரிய செஞ்சோற்றுக் கடனை (வுசாசம் என்னும் ஆன்மீக உணவுக்காக) எமது தமிழ் மறை மாவட்டங்கள் செலுத்த வேண்டும். அவரின் நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சம்மனசுக் சுவாமி என்று; அழைக்கப்படும் அவர் புனிதராக்கப்பட வேண்டிய புதுமை எங்கள் மத்தியில் நிகழட்டும் அவருக்காகவும் செபித்து, நாமும் ஆசீர் பெறுவோமாக.

## சிறையில் இருந்து வெளியேறத்தான் வேண்டுமா?

### (சிறுகதை)

ஒரு முறை சிறைக்காவலன் சிறையிலுள்ளோருக்கு ''நீங்கள் இந்தச்சிறைக்கூடுகளில் நிறைந்த சுதந்திரத்தோடு இருக்கிறீர்கள்'' என்று கூறினான். அவர்களுக்குப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

அவர் மீளவும் சொன்னார். ''நீங்கள் உலகத்தில் இருப்பதையே மறந்துள்ளீர்கள். உங்களுக்கு உணவும், உடையும், இருக்க உறைவிடமும் உள்ளது. ஆனால் நான் வேலை முடிந்து வீடு திரும்பினால் வீட்டை துப்பரவு செய்யவேண்டும், இரவு உணவு தயாரிக்க வேண்டும், உடைகளைத் துவைக்கவேண்டும், குழந்தைகளைப் படுக்கவைக்கவேண்டும்'' இதைக் கேட்டவுடன் சிறையில் உள்ளவர்கள் சிறிது ஆறுதலடைந்தார்கள்.

## பராக் ஒபாமாவுக்கு கிடைத்த நோபல் பரிசை வத்திக்கான் வரவேற்றது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களுக்கு வழங்கப்பட்ட சமாதானத்திற்கான நோபல் பரிசை வத்திக்கான் பாராட்டியுள்ளதோடு உண்மையான நம்பிக்கையுடன் கூடிய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது என்று வத்திக்கான் பேச்சாளரான யேசு சபையைச்சேர்ந்த அருட்தந்தை பெட்ரிக்கோ லொம்பாடி பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார். ஜனாதிபதி ஒபாமா அவர்கள் உலகின் சமாதான விருத்திக்காக சர்வதேசமட்டத்தில் எடுக்கின்ற முயற்சிகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதாக இப்பரிசினை வழங்கியதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

எதிர்கால மனித சமுதாயத்தை இரசாயண ஆயுத அழிவுகளில் இருந்து காப்பாற்றுவதற்கு அவருடைய எழுத்துமூல அறிக்கை நம்பிக்கை தருகின்ற செய்தியாக அமைகிறது. வத்திக்கானின் அமெரிக்காவுக்கான புதிய தூதுவர் மிகுல் டயஸ் அவர்கள் வத்திக்கான் வானொலிக்கு வழங்கிய செவ்வியில் உலகின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இரசாயன ஆயுதங்கள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பிரகடனப்படுத்தியமை மக்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்தியதோடு அங்கிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

## நீங்கள் ஆயத்தமா...

இவ்வருடமும் உங்கள் சிறந்த ஆக்கங்களால் கிறிஸ்துவின பிறப்போடு வரவிருக்கும் காவலன் பத்திரிகையை அழகுபடுத்தி சிறப்பிக்க உடன் உங்கள் கவிதை, கட்டுரை, சிந்தனை என்பவற்றை எமக்கு அனுப்பி வைத்து, தற்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு கிறிஸ்துவின் பிறப்பு அர்த்தம் பெறக்கூடிய வகையில் சிந்தனைகளை அனுப்பி வைக்கவும்.

உங்கள் ஆக்கங்களை நவம்பர் மாதம் 30ம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடிய விதமாக அனுப்பி வைக்கவும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர [illegible] 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org